
# தமிழரசு

ஜூலை 16–31, 1999 ரூ.5











## நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.


அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98



## இந்த இதழில்...


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2030
ஆனி–ஆடி
ஜூலை 16–31, 1999
இதழ் : 2
மலர் : 31
விலை ரூ. 5


### திருக்குறள்

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.

தன்னைவிட மெலிந்தவர்களைத் துன்புறுத்த நினைக்கும் போது, தன்னைவிட வலியவர் முன்னால் அஞ்சி நிற்கும் நிலைமை தனக்கு இருப்பதை மறந்துவிடக் கூடாது.

– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...

**முதல் பக்க அட்டையில்**

தியாகிகள் தினத்தன்று தியாகிகள் சங்கரலிங்க நாடார், பாஷ்யம் சிலைகளுக்கு முதலமைச்சர் கலைஞர் மாலை அணிவித்தார்.

**கடைசிப் பக்க அட்டையில்**

கலையுலகினர் வழங்கும் கார்கில் நிதி.


★ கார்கில் வீரத் தியாகிகள் .......... 2
★ கலையுலகினர் வழங்கிய கார்கில் நிதி .......... 11
★ மின்னணு எந்திரம் மூலம் வாக்குப் பதிவு .......... 14
★ கலைமாமணி விருது .......... 16
★ தியாகிகள் தினம் .......... 18
★ கம்பனும், பாரதியும் .......... 19
★ ஓ மழைக் காலமே! .......... 24
★ வேலைவாய்ப்பு பதிவு புதுப்பிக்கத் தவறியவர்களுக்குச் சிறப்புச் சலுகை .......... 27
★ பூங்காற்றே! .......... 28
★ எங்கள் ஊர் பிரச்சினை .......... 29
★ இண்டர்நெட் ஓர் அறிமுகம் .......... 34
★ மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினை அரசின் அணுகுமுறை .......... 39
★ ஆதிதிராவிட மாணவர்கள் கல்வி உதவி பெற .......... 41

# கார்கில் வீரத் தியாகிகள்

காஷ்மீர் எல்லையில் உள்ள கார்கில் பகுதியில் மக்கள் வசிக்காத படாலிக், கக்கர், தரஸ் போன்ற பகுதிகளில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவினர். இரு நாடுகளுக்கு இடையிலான ஆதிக்க எல்லைக் கோட்டையும் தாண்டி இந்தியப் பகுதிக்குள் அவர்கள் நுழைந்து நிலைக் கொண்டனர். அங்கிருந்து இந்தியப் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தினர். ஊடுருவல் காரர்களுக்குப் பின்னணியில் இருந்து கொண்டு பாகிஸ்தான் இராணுவமும் இந்தியப் பகுதிக்குள் தாக்குதல் நடத்தியது.

இந்திய இராணுவம் தீவிர எதிர்த் தாக்குதலை தொடுத்தது. இந்திய இராணுவத்தின் தாக்குதலை எதிர்கொள்ள இயலாமல் ஊடுவல்காரர்களும் பாகிஸ்தான் இராணுவத்தினரும் தற்போது கார்கில் எல்லையை விட்டு வெளியேறியுள்ளனர்.


இந்த கார்கில் போரில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 10 வீரர்கள் தங்களது இன்னுயிரை தியாகம் செய்துள்ளனர்.

அவர்களது தியாகத்தைப் போற்றி தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முதலில் ரூ.2 இலட்சம் அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கினார். அதன் பின்பு ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டார்கள்.



மேஜர் சரவணன் உடலுக்கு சட்டப் பேரவைத் தலைவர் திரு.பி.டி.ஆர்.பழனிவேல்ராசன் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இந்திய — பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் ஊடுருவலையும் தாக்குதலையும் எதிர்த்து நடைபெற்ற சண்டையில் பீகார் ரெஜிமெண்டில் பணியாற்றிய திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மேஜர் சரவணன் வீர மரணம் அடைந்தார்.



கர்னல் நடராஜின் உடலுக்கு வருவாய்த்துறை அமைச்சர் திரு.நாஞ்சில் மனோகரன் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

கார்கில் போரில் இந்திய இராணுவத்தில் ராக்கெட் பிரிவில் நாயக் ஆக வேலை பார்த்து வந்த தஞ்சை மேம்பாலம் சிவாஜிநகர் பகுதியைச் சேர்ந்த ஆர்.காமராஜ் வீரமரணம் அடைந்துள்ளார். இவர்களை இழந்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்த முதலமைச்சர் கலைஞர், அரசின் சார்பில் அவரது இல்லத்திற்குச் சென்று அவருடைய குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவிட்டார்.

### வீரமரணம் எய்திய மேஜர் சரவணன் அவர்களின் சகோதரி கோரிக்கை அரசு ஏற்பு

முதல்வர் அவர்கள் திருச்சி சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, காஷ்மீர் எல்லையில் கார்கில் பகுதியில் போரில் வீரமரணமெய்திய இராணுவ மேஜர் திரு.சரவணன் அவர்களின் சகோதரி டாக்டர் சித்ரா தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் மருத்துவர் பணி நியமனம் பெற்றுள்ளதாகவும் அவர் தனக்கு சொந்த ஊருக்கருகாமையில் பணியிலமர்த்திட முதல்வர் அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

முதலமைச்சர் அவர்கள் டாக்டர் சித்ராவின் கோரிக்கையினை ஏற்று அவருக்கு அவரது சொந்த ஊருக்கு அருகாமையில் உள்ள நாகமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியிலமர்த்தி ஆணை வழங்கி பணியில் அமர்த்தப்பட்டார்.

### போரில் ஈடுபட்டு மறைந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்குச் சலுகைகள் - முதலமைச்சர் கலைஞர் உத்தரவு

இந்தியா—பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் ஊடுருவலையும், தாக்குதலையும் எதிர்த்து நடைபெற்ற சண்டையில், இந்திய இராணுவத்தில் பணியாற்றிய தமிழ்நாட்டைச் சார்ந்த ஐந்து இராணுவ வீரர்கள் வீரமரணம் அடைந்துள்ளனர்.

இந்த வீரர்களை இழந்து துயருற்றிருக்கும் இவர்களது குடும்பத்தினருக்கு ஏற்கெனவே முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துள்ளார்கள். மறைந்த தியாகிகளின் நாட்டுப் பற்றினையும், தியாகத்தையும் போற்றும் வகையில் இவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஐந்து இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவர்களின்

குடும்பத்தைச் சேர்ந்த ஒரு நபருக்கு தமிழக அரசால் கருணை அடிப்படையில் அரசு பணி வழங்கப்படும். உயிரிழந்த வீரர்களின் குழந்தைகளுக்குக் கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பு வரையில் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படும். இக்குழந்தைகள் தொழிற்கல்விகளில் சேர்ந்து மேல்படிப்பு படிப்பதற்கும் இடஒதுக்கீடு செய்யப்படும்.

இந்த இராணுவ வீரர்களின் குடும்பத்தாருக்கு வீட்டுமனை, வீட்டு வரி மீளப் பெறுதல் போன்ற சலுகைகளும் செய்து தரப்படும். மேலும், இக்குடும்பங்களின் நிலைமைகளை நேரில் சென்று விசாரித்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை மத்திய, மாநில அரசுகளிடமிருந்து உடனடியாகப் பெற்றுத் தரும் வகையில் முன்னாள் படை வீரர்கள் நலத் துறையின் கூடுதல் இயக்குநர் பொறுப்பு வகிக்கும் கேப்டன் திரு.ஜீவானந்தம் அவர்களை சிறப்பு அலுவலராக நியமித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்த அதிகாரி போரில் மரணமடையும் தமிழக வீரர்களுடைய குடும்ப நலன்களை மாத்திரமல்லாமல், காயமடைகின்ற வீரர்களின் குடும்ப நலன்கள் பற்றியும் கவனித்து நடவடிக்கை எடுப்பது பற்றி அரசுக்கு அறிக்கை தருவார்.

## இறுதி மரியாதை

சண்டையில் வீரமரணம் அடைந்த தமிழக இராணுவ அதிகாரி கர்னல் நடராஜின் உடல் 26—6—1999 அன்று இரவு 9—30 மணிக்கு விமான மூலம் சென்னை கொண்டு வரப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் ஆணையின் பேரில் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.க.சுந்தரம் ஆகியோர் சென்னை விமான நிலையம் சென்று தமிழக அரசின் சார்பில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

27—6—1999 அன்று காலை 9—00 மணிக்கு மறைந்த கர்னல் நடராஜின் உடல் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தும் வகையில் தாம்பரத்திலுள்ள தேசிய சித்த ஆராய்ச்சி நிலைய மைதானத்தில் வைக்கப்பட்டிருந்தது. தமிழக அரசின் சார்பில் வீரமரணம் அடைந்த நடராஜின் உடலுக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.நாஞ்சில் கி. மனோகரன், மாண்புமிகு இந்து—சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.தமிழ்க்குடிமகன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி எஸ்.பி.சற்குணபாண்டியன், மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு.அந்தியூர் செல்வராஜ் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் திரு.மு.க.ஸ்டாலின் ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.



மேஜர் சரவணன் உடலுக்கு சென்னை மாநகர மேயர் திரு.மு.க.ஸ்டாலின் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

கார்கில் எல்லை பகுதியில் நடைபெற்ற வரும் சண்டையில் வீரமரணம் எய்திய மேஜர்

சரவணனின் உடல் 11—7—1999 அன்று சென்னை கொண்டுவரப்பட்டு தாம்பரத்திலுள்ள விமானப்படை மைதானத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு சட்டபேரவைத் தலைவர் திரு.பி.டி.ஆர். பழனிவேல்ராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி அவர்கள், மாண்புமிகு அறநிலையத்துறை மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்கள், மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு.கு. பிச்சாண்டி அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.என்.சுரேஷ்ராஜன் அவர்கள், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

வீரமரணம் அடைந்த வீரர் சபியுல்லா உடல் விமானம் மூலம் பெங்களூர் வந்து அங்கிருந்து இராணுவ டிரக் மூலம் 14—7—99 அன்று தருமபுரி மாவட்டம் காவேரிப்பட்டணம் நகரில் உள்ள அவரது வீட்டிற்கு கொண்டுவரப்பட்டது. வீரர் சபியுல்லா உடலுக்கு மாண்புமிகு செய்தி,விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் திரு.வ.முல்லை வேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சாய்குமார் ஆகியோர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். அமைச்சர் அரசின் உதவிகளை சபியுல்லா குடும்பத்தினருக்கு வழங்கினார்.

கார்கில் எல்லைப் பகுதியில் நடைபெற்று வரும் சண்டையில் வீரமரணம் எய்திய தேனி மாவட்டத்தைச் சேர்ந்த சிப்பாய் செந்திலின் உடல் 12—7—1999 அன்று சென்னை கொண்டுவரப்பட்டு, சென்னை விமான நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டிருந்தது.

தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா.வீராசாமி அவர்கள், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை மற்றும் தமிழ் ஆட்சிமொழி—பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்கள், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.க.சுந்தரம் அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.அ.இரகுமான்கான் அவர்கள் ஆகியோர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

காஷ்மீரப் பகுதியில் கார்கில் எல்லை பகுதிகளில் பாகிஸ்தான் ஊடுருவலை எதிர்த்து நடைபெற்று வந்த இராணுவ நடவடிக்கைகளில் மெட்ராஸ் 8ஆவது படைப் பிரிவை சார்ந்த சிப்பாய் திரு.அப்துல் சத்தார் வீரமரணம் அடைந்துள்ளார். இவர் நீலகிரி மாவட்டம் குன்னூரைச் சார்ந்தவர். மறைந்த இராணுவ வீரரின் இறுதிச் சடங்குகளில் தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.பொங்கலூர் நா.பழனிசாமி கலந்து கொண்டார்.

## வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கிய உதவிகள்

**மேஜர் எம்.சரவணன்,** பீமநகர், திருச்சி

கருணைத்தொகை ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டது.



சென்னையில் ரூபாய் 11 இலட்சத்தில் தாயார் அமிர்தவல்லிக்கு குடியிருக்க தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர் வருவாய் பிரிவு வீட்டு எண்.93/எப்1 திருவான்மியூர் விரிவாக்கத்தில் ஒதுக்கிடு செய்யப் பட்டுள்ளது.

தாயார் அமிர்தவல்லிக்கு பெட்ரோல் பங்க் நடத்த உரிமம் வழங்கிட மைய அரசிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மத்திய பெட்ரோலியம் மற்றும் எரிவாயுத்துறை அமைச்சருக்கு 23—7—1999 நாளிட்ட நேர்முகக் கடிதம் மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சரவணணின் சகோதரி செல்வி ரேவதிக்கு, எல்காட் நிறுவனத்தில் வேலைவாய்ப்பு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. செல்வி ரேவதியினுடைய கல்வித் தகுதி சான்றிதழ்களைக் கேட்டு கடிதம் அனுப்பி யுள்ளது. விரைவில் பணி நியமனம் செய்யப்படும்.

சரவணனின் மற்றொரு சகோதரி செல்வி டாக்டர் எம்.சித்ரா, எம்.பி.பி.எஸ்., உதவி மருத்துவர் பணிக்காக தேர்வு செய்யப்பட்டிருந்த நிலையில் அவர் வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி நாகமங்கலத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி மருத்துவராகப் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

**நாயக் ஆர். காமராஜ்,** தஞ்சாவூர்



ரூ.5 இலட்சம் கருணைத் தொகை மனைவி திருமதி தனலட்சுமிக்கு வழங்கப்பட்டுள்ளது.

மனைவி திருமதி தனலட்சுமிக்கு கருணை அடிப்படையில் தஞ்சையில் முன்னாள் படைவீரர்கள் நல அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணியமர்த்தப்பட்டுள்ளார்.

மனைவி திருமதி தனலட்சுமிக்கு தஞ்சாவூரில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர்வருவாய் பிரிவு வீடு எண்.299ஏ, தஞ்சாவூர் புறநகர் திட்டத்தில் ரூ.6,14,000 மதிப்பீட்டில் வழங்கப்பட்டு விட்டது.

மகன் அன்பு வெங்கடேஷ் (வயது 4) எதிர்காலத்தில் அவர் விரும்பும் அரசு கலை/பொறியியல்/மருத்துவக் கல்லூரியில் சிறப்பினமாக ஓர் இடம் அளிக்க அரசாணை 28—6—1999 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

**சாப்பர் மா.ஜெயவேலு,** காட்டுக்காநல்லூர் கிராமம், திருவண்ணாமலை மாவட்டம்



கருணைத்தொகை ரூ.5 இலட்சம் தாயார் திருமதி சாந்திக்கு வழங்கப்பட்டுள்ளது.

தாயார் திருமதி சாந்திக்கு வேலூரில் உயர் வருவாய் பிரிவு வீடு ஒன்று புறநகர் பகுதி நான்கில் வீட்டு எண்.83, ரூ. 7,11,700 மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

**கன்னர் ந.பழனி,** பூசிமலைக்குப்பம், திருவண்ணாமலை மாவட்டம்



கருணைத் தொகை ரூ.5 இலட்சம் மனைவி திருமதி. பூங்காவனத்திற்கு அளிக்கப்பட்டது.

மனைவி திருமதி பூங்காவனத்திற்கு கருணை அடிப்படையில் ஆட்சித்தலைவர் அலகில் திருவண்ணாமலை மாவட்டத்தில் அலுவலக உதவியாளராகப் பணி நியமனம் செய்ய திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியருக்கு அரசாணை வாயிலாக 28—6—99 அன்று ஆணை வெளியிடப்பட்டு, முல்லன்திரம் உயர்நிலைப் பள்ளியில் அலுவலக உதவியாளராக பணி நியமனம் 8—7—99 தேதியில் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டுள்ளது. அவர் 21—7—99 தேதியில் பணியில் சேர்ந்துள்ளார்.

மனைவி திருமதி.பூங்காவனத்திற்கு வேலூர் புறநகர்ப் பகுதி—4இல் உயர் வருவாய் பிரிவு வீட்டு எண்.82, ரூ. 7,14,200 மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

மகன் விக்னேஷ் (வயது—4)க்கு எதிர்காலத்தில் உரிய வயதில் அரசு கலை/பொறியியல்/மருத்துவக் கல்லூரியில் அவர் விருப்பத்திற்கிணங்க சிறப்பினமாகக் கருதி ஓர் இடம் அளிக்க 28—6—99 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## லெப்டினென்ட் கர்னல் என்.வி.ராகவன்,

தாம்பரம், சென்னை.



கருணைத் தொகை ரூ.5 இலட்சம் மனைவி திருமதி. சுபத்ராவுக்கு வழங்கப்பட்டது.

மனைவி திருமதி சுபத்ரா அவர்களுக்கு சென்னை வால்மீகி நகரில் திருவான்மியூர் விரிவாக்கத்தில் உயர் வருவாய் பிரிவு வீட்டு எண்.82/எப்1, ரூ. 10,52,850 மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

மனைவி திருமதி. சுபத்ராவுக்கு பெட்ரோல் பங்க் நடத்த உரிமம் வழங்கிட மைய அரசிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மத்திய பெட்ரோலியம் மற்றும் எரிவாயு துறை அமைச்சருக்கு 23—7—99 நாளிட்ட நேர்முகக் கடிதம் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மகன் செல்வன் அனில் ராகவனுக்கு சென்னை பத்மா சேஷாத்திரி பள்ளியில் முன்னாள் படை வீரர் நல இயக்ககத்தினரின் முயற்சியால் சேர்க்கை பெறப்பட்டுள்ளது.

மகன் அனில் ராகவன் மற்றும் மகள் பூஜா ராகவன் ஆகிய இருவருக்கும் எதிர்காலத்தில் அவர்கள் விரும்பும் அரசு கலை/பொறியியல்/மருத்துவக் கல்லூரியில் சிறப்பினமாகக் கருதி ஓர் இடம் அளிக்க ஆணை வேண்டி சுற்றனுப்பப்பட்டுள்ளது.

## திரு த. செந்தில்,

கரியனம்பட்டி, தேனி மாவட்டம்



கருணைத் தொகை ரூ.5 இலட்சம் தந்தை திரு. தங்கராஜ் மற்றும் தாய் திருமதி விஜயா ஆகிய இருவருக்கும் வழங்கப்பட்டது.

சகோதரர் திரு. கண்ணன் அவர்களுக்கு தேனி மாவட்டத்தில் அரசுத் துறை ஏதேனும் ஒன்றில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியிடம் வழங்கும்படி மாவட்ட ஆட்சியர் தேனி அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார். (அரசாணை எண், 1001 நாள் 29.7.99)

தந்தை மற்றும் தாயார் ஆகிய இருவரின் பெயரிலும் அவர்கள் விரும்புமிடத்தில் உயர் வருவாய் பிரிவு குடியிருப்பு வழங்க அரசாணை எண் 979, நாள் 26.7.99 வாயிலாக ஆணையிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், வீடு வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

## திரு. கே. பாஸ்கர், உதவி ஆய்வாளர்,

எல்லை பாதுகாப்புப் படை பிரிவு

மனைவி திருமதி ராதா அவர்களுக்கு கருணைத் தொகை ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மனைவி திருமதி ராதா அவர்களுக்கு திருச்சியில் நாவல்பட்டு குடியிருப்பு திட்டத்தின் கீழ் உயர் வருவாய் பிரிவு வீடு எண். எச்/100 26.7.99 நாளிட்ட அரசாணை நிலை எண் 980ன் படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இதன் தொடர்பாக மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மனைவி திருமதி ராதாவுக்கு கருணை அடிப்படையில் திருச்சி மாவட்ட அரசு அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மகன் நவநிதி (வயது—5)—க்கு எதிர்காலத்தில் அவர் விருப்பத்திற்கிணங்க அரசு கலை/பொறியியல்/மருத்துவக் கல்லூரியில் சிறப்பினமாகக் கருதி ஓர் இடம் வழங்கப்படும்.

**திரு. சபியுல்லா,** அவில்தார்,

காவேரிப்பட்டினம், தருமபுரி மாவட்டம்



கருணைத் தொகை ரூ.5 இலட்சம் மனைவி திருமதி முபாரக் அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

குடியிருக்க கிருஷ்ணகிரி புறநகர் திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரியில் உயர் வருவாய் குடியிருப்பு (பிளாட்) எண்.87, ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. அரசு ஆணை எண்.971, நாள் 23.7.99. இதன் தொடர்பாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மனைவி திருமதி முபாரக் அவர்களுக்கு பதிவுரு எழுத்தர் பதவிக்கு தருமபுரி மாவட்ட அலகில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க ஆணை வேண்டி கோப்பு சுற்றனுப்பப்பட்டுள்ளது.

மகன்கள் சை. இம்ரான் மற்றும் சை. சலாமத் ஆகிய இருவரும் எதிர்காலத்தில் அவர்கள் விருப்பத்திற்கிணங்க அரசு கலை/பொறியியல்/ மருத்துவக் கல்லூரிகளில் சிறப்பினமாகக் கருதி ஓர் இடம் அளிக்கப்படும்.

**திரு. அப்துல் சத்தார்,** சிப்பாய், குன்னூர்,

நீலகிரி மாவட்டம்

தாயார் திருமதி அம்மு பீ அவர்களுக்கு கருணைத்தொகை ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

குடியிருக்க குன்னூரில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர் வருவாய் பிரிவு வீடு ஒன்று வழங்க 29.7.99 நாளிட்ட அரசாணை நிலை எண்.1000 வாயிலாக




ஆணையிடப்பட்டுள்ளது. குன்னூரில் உயர் வருவாய் பிரிவு வீட்டு எண்.30—ஐ வழங்க வேண்டி அவரது தாயார் கோரியுள்ளார். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மேற்கண்ட குடியிருப்பை வழங்குவதற்கு முன் சில கட்டடப் பணிகள் மேற்கொண்டுள்ளது. விரைவில் வீடு வழங்கப்படும்.

வீரமரணமுற்ற படைவீரர்களின் சகோதரர் திரு. அப்துல் ரகுமான் அவர்களுக்கு நீலகிரி மாவட்ட அலகில் உதவியாளராக பணி நியமனம் வழங்க ஆணை வேண்டி கோப்பு சுற்றனுப்பப்பட்டுள்ளது.

**திரு. முகிலன்,** ப்ளைட் லெப்டினன்ட்,

கோட்டூர் கிராமம், சிவகங்கை மாவட்டம்.

இவரது மனைவி திருமதி பீனா முகிலன் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். இவர்



தற்போது கர்நாடக மாநிலத்தில் பெல்காமில் வசித்து வருகிறார். திரு. முகிலனின் தாயார் திருமதி சிந்தாமணி அவர்கள் கோட்டூர் கிராமத்தில் வசித்து வருகிறார். தாயார் திருமதி சிந்தாமணியும் நிவாரண உதவிகளை தனக்கும் வழங்கும்படி மாவட்ட ஆட்சித்தலைவர், சிவகங்கை அவர்களிடம் விண்ணப் பித்துள்ளார். மனைவி மற்றும் தாயார் ஆகிய இருவரும் அரசு நிவாரணத்தைக் கோரியுள்ளதால், திரு. முகிலன் உயிருடன் இருந்தபோது தாக்கல் செய்துள்ள உயில் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் தொடர்பான ஆவணங்களை, அவர் பணி புரிந்த விமானப்படை அதிகாரியிடம்' அரசு கோரியது. தற்பொழுது மேற்படி ஆவணங்கள் பெறப்பட்டுள்ளன. அதன்படி திருமதி பீனா முகிலன் வாரிசாக நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி பீனா முகிலனை தொலைபேசி மூலம் சிறப்பு அலுவலர் 22.7.99 அன்று தொடர்பு கொண்டு அவரின் விருப்பத்தினை தெரிவிக்கும்படி கேட்டுள்ளார். திருமதி பீனா முகிலன் தனக்கு அரசுப் பணி தேவையில்லையென்றும், கருணைத் தொகையும் மற்றும் இலவச வீடும், தனது மகன் துருவுக்கு கல்வி உதவியும் கோரியுள்ளார்.

மேலும் குடியிருக்க வீடு தமிழ்நாட்டில் எந்த இடத்தில் வேண்டும் என்ற தனது விருப்பத்தினைத் தெரிவிக்க 10 தினங்கள் அவகாசம் கேட்டுள்ளார். அவரின் விருப்பம் பெறப்பெற்ற பின் அரசாணைகள் வெளியிடப்படும். இவருக்கு அளிக்கப்பட வேண்டிய கருணைத் தொகை ரூ.5 இலட்சத்துக்கான காசோலை சிவகங்கை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டுள்ளது.



*செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் திரு.வ.முல்லைவேந்தன் செய்தித்துறை சார்பில் கார்கில் நிதியாக ரூ**1,72,248**க்கான காசோலையினை முதலமைச்சரிடம் வழங்குகிறார்.*

## கார்கில் நிதி 40 நாட்களில் ரூ.41 கோடி

தமிழகத்தின் சார்பாக கார்கில் போராட்ட வீரர்கள் நிவாரண நிதி திரட்டி பிரதமரிடம் வழங்கப்படும் என்று தமிழக முதல்வர் கலைஞர் 23.6.99 அன்று அறிவித்ததையொட்டி அன்றாடம் தமிழகததின் அனைத்துத் தரப்பு மக்களிடமிருந்தும் தமிழக அரசுக்கு நிதி குவிந்தது. முதல்வர் கலைஞர் அன்றாடம் காலை 10.30 மணி முதல் தலைமைச் செயலகத்தில் இந்த நிதியை வசூலித்ததோடு



வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு.கு.பிச்சாண்டி மறைந்த லெப்டினெண்ட் கார்னல் என்.வி.ராகவன் அவர்களின் துணைவியார் திருமதி. சுபத்ராவுக்கு அரசு ஒதுக்கிய வீட்டின் சாவியை வழங்குகிறார்.

7.7.99 அன்று டெல்லியில் பிரதமரிடம் 15 கோடி ரூபாய்க்கான காசோலையை தமிழக அரசின் சார்பாக அளித்த போது பிரதமர் தமிழக முதல்வரிடம் இதனை முதல் தவணையாக எடுத்துக் கொள்ளலாமா என்று வினவினார். அவ்வாறே முதல்வர் அறிவித்து 40 நாட்களே ஆன நிலையில் கார்கில் நிதி வசூலிக்க இறுதி நாளாக அறிவிக்கப்பட்டிருந்த 31.7.99 வரையில் 39 கோடி ரூபாய் தலைமைச் செயலகத்திலே நிதி வசூலாகியுள்ள நிலையில் இன்னும் சில மாவட்டங்களிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இரண்டு கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட தொகையைச் சேர்த்து தமிழகத்தின் சார்பில் கார்கில் போராட்ட வீரர்கள் நிவாரண நிதியாகச் சேர்ந்த தொகை 41 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது. மேலும், இன்றுடன் தலைமைச் செயலகத்திலே முதல்வர் அவர்கள் அன்றாடம் கார்கில் நிதி வசூல் செய்வது நிறுத்தப்படுவதோடு மேலும் சிலர் தங்கள் நிறுவனங்களின் சார்பில் நிதி வசூலித்து இன்னும் தராமல் தங்கள் கைவசம் வைத்திருப்பார்களேயானால் அந்த நிதியை நேரடியாக பொதுத்துறை செயலாளருக்கு அனுப்பி வைத்திடலாம். கார்கில் நிதி வழங்கிய அனைவருக்கும் பொதுத்துறை சார்பில் ரசீது அனுப்பப்பட்டுள்ளது. 40 நாட்களில் 41 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு முதல் இடத்திலே இருந்து தமிழகம் வசூலித்துக் கொடுப்பதற்கு உதவியாக இருந்த தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் தமிழக முதலமைச்சர் தமிழக அரசின் சார்பில் தனது இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்.

# கலையுலகினர் வழங்கிய கார்கில் நிதி

**கா**ர்கில் நிதி வழங்குவதில் தமிழக மக்கள் காட்டிய ஆர்வம் போற்றத்தக்கது. அவர்களைப் போன்றே திரைப்படக் கலையுலகினர் பேரார்வம் கொண்டு கார்கில் நிதிக்காக மதுரையில் **11.7.99** அன்று கலைநிகழ்ச்சிகள் நடத்தியும் **18.7.99** அன்று சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் நட்சத்திர கிரிக்கெட் போட்டியினையும் கலை நிகழ்ச்சிகளையும் நிகழ்த்தி நிதிதிரட்டினார்கள்.

## கிரிக்கெட் விளையாட்டு கலை நிகழ்ச்சிகள்

கார்கில் போராட்ட வீரர்களுக்கு நிதி திரட்டிட சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் விளையாட்டரங்கில் நடைபெற்ற விழாவில் முன்னதாக பிற்பகல் **2** மணியிலிருந்து கலையுலகினர் மற்றும் கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்ற கிரிக்கெட் போட்டி **18–7–1999** அன்று முன்னாள் கிரிக்கெட் வீரர்களான கபில்தேவ் மற்றும் ஸ்ரீகாந்த் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்த கிரிக்கெட் போட்டியில் மேயர் மு.க.ஸ்டாலின், ராபின்சிங், ஜடேஜா, ஸ்ரீநாத், ராகுல் ட்ராவிட், சடகோபன் ரமேஷ் மற்றும் திரையுலக முன்னணி நடிகர்களான சுப்ரீம் ஸ்டார் சரத்குமார், பிரபு, அரவிந்தசாமி, பார்த்திபன், கார்த்திக், முரளி, இந்தி நடிகர் அனுபம் கேர், சிலம்பரசன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு விளையாடினர்.

கார்கில் போராட்ட வீரர்களுக்கு நிதி திரட்டும் வகையில் கலையுலகினர் சார்பில் நடைபெற்ற இந்த விழாவில் இதற்காக பாடுபட்டோரை பாராட்டும் வகையில் மாலை 7 மணியளவில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விளையாட்டு அரங்கிற்கு வருகை தந்தார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்களை நடிகர் திலகம் சிவாஜி கணேசன், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் மற்றும் இவ்விழாவினை முன்னின்று நடத்திய சுப்ரீம் ஸ்டார் சரத்குமார், கலையரசி ராதிகா உள்ளிட்ட பலர் வரவேற்றனர்.

இந்த விழாவில் இதற்குமுன் மதுரையில் சென்ற **11**ஆம் தேதி கலையுலகினர் திரட்டிய நிதியினையும் இணைத்து முதல் தவணையாக ரூ.1 கோடிக்கான காசோலையினை நடிகர் திலகம் சிவாஜிகணேசன் முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் வழங்கினார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவரது சார்பில் ரூ.**5** இலட்சம் நிதியினை வழங்கினார்.

மேலும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கச் செயலாளர் கும்பட், இணைச் செயலாளர் நந்தகுமார் ஆகியோர் கார்கில் நிவாரண நிதியாக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் ரூ.1 இலட்சம் வழங்கினர்.

இந்த விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த மேயர் மு.க.ஸ்டாலின், வெங்கட்ராகவன், கபில்தேவ், சன் டி.வி. நிர்வாகி கலாநிதி மாறன், ஸ்ரீகாந்த், வெங்கடேஷ் பிரசாத், ராபின்சிங், சடகோபன் ரமேஷ், டபிள்யு வி.இராமன், சிவராம கிருஷ்ணன், ஸ்ரீநாத், ராகுல் ட்ராவிட், அனுபம்கேர், மாத்தூர் பஜாஜ், இந்தியன் வங்கி தலைவர் சுப்பிரமணியம், கீர்த்திவாசன், பெப்சி நிர்வாகி ஆகியோர்களுக்கு

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பூங்கொத்து வழங்கி சிறப்பித்தார்.

காசோலையைப் பெற்றுக்கொண்டு முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை வருமாறு :

"தமிழக கலைஞர்கள் மாத்திரம் அல்லாமல்; தென்னக கலைஞர்களும், வடபுலத்து மாநிலத்தில் உள்ள கலைஞர்களும் ஒன்று கூடி மதுரையிலும் சென்னை மாநகரத்திலும் கலைநிகழ்ச்சியும் அத்துடன் இணைந்து கிரிக்கெட் போட்டியினையும் நடத்தி அதன் வாயிலாக சேர்த்திருக்கின்ற பெரும் தொகை ஒன்றை கார்கில் போராட்ட வீரர்களுடைய நிவாரண நிதிக்காக வழங்குவது என்று தீர்மானித்து மதுரையிலே 11ந்தேதி ஒரு நிகழ்ச்சியும் இன்றைக்கு சென்னை மாநகரத்திலே இன்னொரு நிகழ்ச்சியும் நடத்தி அதற்கு தமிழ்நாட்டு பொதுமக்கள் தந்த பேராதரவின் காரணமாக ஒரு நல்ல போலவும், குறிப்பாக சரத்குமார் அவர்களும் அரவிந்தசாமிபோன்றவர்களும் அவர்களோடு கலையுலகப் பெருமக்கள் பலரும் ஒத்துழைத்து தங்களுடைய திறன், தங்களுடைய அருமையான ஆற்றல், தங்களுடைய உழைப்பு, தங்களுடைய பல்வேறு பணிகளுக்கிடையே இதையும் ஒரு பெரும் கடமையாகக் கொண்டு இந்திய நாட்டு வீரர்களுக்காக அவர்களின் குடும்பங்களுக்காக இந்த தொகையினை திரட்டித் தருகின்ற அரும்பணியினை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

**இந்தியா தொடர்ந்து வெற்றி பெற கலையுலகின் பேராதரவு தொடரட்டும்**

இந்தப் போராட்டத்தில் பெரும் வெற்றியினை இந்தியத் திருநாடு பெற்றிருக்கின்றது. கார்கில் களத்தில் நாம் பெற்றிருக்கின்ற வெற்றி மகிழத்தக்கது என்றாலும் கூட அதைவிட மகிழத்தக்க செய்தி இந்தப் போரிலே



தொகையை இன்றைக்கு என்னிடத்திலே வழங்கி யிருக்கின்றார்கள்.

சென்னை மாநகரத்திலே வசூலான தொகை எவ்வளவு என்று இன்னும் கணக்கிடப்படாத காரணத்தால் முதல் தவணையாக ஒரு கோடி ரூபாயை என்னிடத்திலே வழங்கியிருக்கின்றார்கள். அதற்கான காசோலையை உங்கள் முன்னிலையில் நான் பெற்றுக் கொண்டிருக்கிறேன். இன்னும் எஞ்சிய தொகையினை விரைவில் இந்த நிதிக்காக என்னிடத்திலே வழங்குவதாக வாக்களித்திருக்கின்றார்கள்.

கலையுலக பெருமக்கள் செவாலியர் சிவாஜி அவர்கள் குறிப்பிட்டதைப் போலவும் சூப்பர் ஸ்டார் தம்பி ரஜினி அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் இந்தியாவே ஒன்று திரண்டு குமரி முதல் இமயம் வரையிலே உள்ள மக்கள் அனைவரும் இந்திய மக்கள் என்கின்ற அந்த உணர்வோடு எதிரியினை முறியடித்திருக்கின்றோம். தொடர்ந்து இத்தகைய வெற்றிகளை நாம் பெறுவதற்கு இன்று கலையுலகப் பெருமக்கள் தந்துள்ள பேராதரவு தொடரட்டும் என்கின்ற அந்த உணர்வோடு என்னுடைய நன்றியை தமிழக அரசின் சார்பாக கலையுலக பெருமக்களுக்கு, இதற்காக பாடுபட்டவர்களுக்கு, இதற்கு உதவுகின்ற வகையிலே கட்டணம் செலுத்தி இந்த நிகழ்ச்சியினை காணவந்த தமிழ்ப்பெருமக்களுக்கெல்லாம் நான் நன்றியினை உரித்தாக்கி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்".

★ ★ ★

# நேப்பியர் பாலம்

சென்னை கடற்கரை, காமராசர் சாலையில் அழகு மிகுந்த நேப்பியர் பாலம் அமைந்துள்ளது. அப்பாலம் அதே வடிவமைப்பைக் கொண்ட மற்றொரு பகுதியுடன் ரூ.5.11 கோடி செலவில் சென்னை மாநகராட்சியின் சார்பில் விரிவுபடுத்திக் கட்டப்பட்டுள்ளது.

இப்பாலத்தின் தொடர்ச்சியாக அமைக்கப்பட்டுள்ள மண்சாலை வலுப்படும் வண்ணம், பொதுமக்கள் உபயோகத்திற்காகவும் வாகனங்களின் போக்குவரத்திற்காகவும் 21.7.99 அன்று திறந்து விடப்பட்டுள்ளது. இப்பாலத்தினை முதலமைச்சர் கலைஞர் பார்வையிட்டபின், இதன் வழியாக முதலமைச்சர் கலைஞர், பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகன், சென்னை மாநகர மேயர் மு.க. ஸ்டாலின் மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோர் நடந்தே கடந்து சென்றனர்.



# "அண்ணா வாழ்கின்றார்" என்னும் செய்தி விளக்கப் படத்திற்கு

# மத்திய அரசின் சிறந்த திரைப்பட தேசிய விருது

தமிழ்நாடு அரசின் திரைப்பட பிரிவு தயாரித்து வெளியிட்டுள்ள அறிஞர் அண்ணா வாழ்க்கை வரலாற்றை விளக்கும் "அண்ணா வாழ்கின்றார்" என்னும் செய்தி விளக்கப் படத்திற்கு மத்திய அரசின் சிறந்த திரைப்பட தேசிய விருது கிடைத்துள்ளது. வரலாற்றை மீண்டும் வடிவமைத்து தொகுத்து வெளியிட்டுள்ள படம் என்கின்ற வகையில் இது சிறந்த படமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இப்படத்தின் தயாரிப்பாளரும், இயக்குநருமான தமிழ்நாடு அரசின் திரைப்படபிரிவு மற்றும் திரைப்படக்கல்லூரி **இயக்குநர் திரு. பி.அமிர்தம்** அவர்களுக்கு தயாரிப்பாளருக்கான பரிசுத்தொகை ரூ.10,000 மற்றும் தங்கபதக்கமும், இயக்குநருக்கான பரிசுத்தொகை ரூ.10,000 மற்றும் தங்கப் பதக்கமும் குடியரசு தலைவர் அவர்களால் புதுடில்லியில் நடைபெறும் விழாவில் வழங்கப்படும்.

திரைப்படபிரிவின் கடந்த முப்பது ஆண்டுகால வரலாற்றில் இப்போது தான் தேசிய விருது கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மின்னணு எந்திர வாக்குப்பதிவு

நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் தமிழகத்தில் சென்னை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் எலக்ட்ரானிக் வாக்குப்பதிவுமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

***மத்திய சென்னை தென் சென்னை***

சென்னை மாவட்டத்தில் மத்திய சென்னை தொகுதிக்கும், தென் சென்னை தொகுதிக்கும் எந்திர வாக்குப்பதிவு செய்யப்படவுள்ளதை முன்னிட்டு சென்னை மாநகராட்சி ஆணையர் கோலப்பன் எந்திரம் மூலம் வாக்குப்பதிவு செய்வது எப்படி என்பது பற்றி நிருபர்களுக்கு விளக்கம் அளித்தார்.

1999ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் மக்களவை பொதுத் தேர்தலின்போது சென்னை மாவட்டத்திற்குட்பட்ட மத்திய சென்னை மற்றும் தென் சென்னை ஆகிய 2 நாடாளுமன்ற தொகுதிகளில் மின்அணு எந்திரக்கருவி மூலம் வாக்குப் பதிவு நடத்த தலைமை தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதியில் உள்ளடங்கிய 6 சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 12 இலட்சத்து 80 ஆயிரத்து 774 வாக்காளர்கள் உள்ளனர்.

தென் சென்னை நாடாளுமன்ற தொகுதியில் 4 சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 9 இலட்சத்து 68 ஆயிரத்து 570 வாக்காளர்கள் உள்ளனர்.

வரும் பாராளுமன்ற தேர்தலில் மத்திய சென்னையில் உள்ள 1,223 வாக்குச் சாவடிகளிலும் மற்றும் தென் சென்னையில் உள்ள 1,970 வாக்குச் சாவடிகளிலும் மின் அணு வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. 3,500 மின் அணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.


***வாக்களிப்பது எப்படி***

இதுவரை நடத்தப்பட்ட தேர்தல்களில் நீண்ட வாக்குச் சீட்டுகளில் வேட்பாளரின் சின்னத்தின்மேல் ஸ்டாம்புகளின் மூலம் முத்திரையிட்டு பின்முன் போல் மடித்து வாக்குப் பெட்டியினுள் செலுத்தும் முறை இருந்தது. வாக்களிப்பு முறை நேரத்தை வீணடிப்பது மட்டுமல்லாமல் தவறுகள் நேரிடுவதற்கு வாய்ப்பளிக்கக் கூடியதாகவும், வாக்குகள் செல்லாமல் போகவும் வாய்ப்புள்ளது.

முன்னர் இருந்த முறையிலிருந்து மாறுபட்டு மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் மூலம் வாக்குகளை அளிப்பதற்கு இந்திய தேர்தல் ஆணையம் தற்போது வாய்ப்பளித்துள்ளது. இந்த புதிய முறை வாக்குப்பதிவு மிக எளிதான முறையில் மட்டுமல்லாமல் குறுகிய கால அளவில் வாக்குகள் பத்திரமாகவும் ரகசியமாகவும் பதிவாக வழி வகுக்கிறது.

நீங்கள் வாக்குச்சாவடிக்குள் நுழைந்தவுடன் பழைய முறைப்படியே தேர்தல் அலுவலரால் உங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் தெரிவு செய்யப்படும்.

**வாக்குப்பதிவு எந்திரம்**




வாக்கு அலுவலர் உங்களை அடையாளம் கண்டவுடன், உங்கள் ஆள்காட்டி விரலின் நகத்தின் அடிப்பாகத்தில் அழியாத மை இடப்படும்.

இதன் பின்னர் வாக்கு அலுவலர். நீங்கள் கையெழுத்திட்ட அல்லது விரல் அடையாளம் வைத்த வாக்குப்பதிவேட்டில் உங்கள் பெயருக்கு எதிரிலான உங்கள் வரிசை எண்ணையும் ஒரு துண்டு சீட்டில் பதிவு செய்து உங்களிடம் கொடுப்பார்.

மூன்றாவது வாக்கு அலுவலர் வாக்கு துண்டு சீட்டில் உள்ள விவரங்களைச் சரிபார்த்தபின் உங்கள் சீட்டைப் பெற்றுக் கொண்டு உங்களை வாக்குப் பதிவு செய்ய அனுமதிப்பார்.

உங்கள் வாக்கை அளிப்பதற்கு வாக்குச் சீட்டு கொடுக்கப்படமாட்டாது. மாறாக, வாக்களிப்பு (கருவி எந்திரம் வைக்கப்பட்டிருக்கும்) இடத்திற்கு நீங்கள் செல்ல அனுமதிப்பார். வாக்களிப்பு எந்திரம் உங்கள் வாக்கு ரகசியமாக இருக்கும் என்பதை உறுதி செய்யும்பொருட்டு வாக்குப் பதிவு அறைக்குள் வைக்கப்பட்டிருக்கும்.

மின்னணு வாக்கு எந்திரம் ஒரு சிறு பெட்டி போல இருக்கும். மேல்பாகத்தில் 'வாக்குப் பதிவு' என்ற இடத்தில் வேட்பாளரின் பெயர் மற்றும் அவரது சின்னம் வாக்குச் சீட்டில் உள்ளது போல அச்சிடப்பட்டு பொருத்தப்பட்டு இருக்கும். ஒவ்வொரு வேட்பாளரின் பெயருக்கும் எதிரிலும் ஒரு சிகப்பு நிற விளக்கும் மற்றும் நீல நிற பொத்தானும் இருக்கும்.


நீங்கள் வாக்குகளைப் பதிவு செய்ய உங்களால் தேர்ந்தெடுக்கப்படவுள்ள வேட்பாளரின் பெயரில் எதிரில் இருக்கும் நீல நிற பொத்தானை அழுத்த வேண்டும். உதாரணமாக வரிசை எண் 2ல் உள்ள பாபு ஆபிரகாம் என்ற வேட்பாளருக்கு வாக்களிக்க விரும்பினால் அவ் வேட்பாளரின் பெயருக்கு எதிரிலிருக்கும் நீல நிற பொத்தானை ஒரு முறை அழுத்த வேண்டும். இந்த பொத்தானை அழுத்தியவுடன் வேட்பாளரின் பெயர் மற்றும் சின்னத்திற்கு எதிரிலுள்ள சிகப்பு நிற விளக்கு எரிய ஆரம்பிக்கும். மேலும் உங்களின் வாக்கு பதிவானதற்கான 'பீப்' எனும் ஒலியும் எழும். இந்த ஒலி நீங்கள் சரியாக வாக்களித்துள்ளதை உறுதி செய்யும்.

நீல நிற பொத்தானை அழுத்தியபின் வேட்பாளரின் பெயர் மற்றும் சின்னத்திற்கு எதிரிலுள்ள சிகப்பு நிற விளக்கு எரியவில்லை எனில், மீண்டும் ஒரு முறை நீல நிற பொத்தானை அழுத்தலாம். ஒரு வேளை விளக்கு சரியாகச் செயல்படவில்லை என்றால் அங்குள்ள வாக்குச் சாவடியின் தலைமை அதிகாரியின் உதவியை நாடலாம்.

வாக்குப்பதிவு எந்திரத்தில் பத்திரமாகவும் ரகசியமாகவும் பதிவு செய்யப்பட்டு இருக்கும். தவறுகள் நேரிடும் என்ற கேள்விக்கே இடமில்லை. வாக்கு வீணாகவில்லை என்ற உறுதியுடன் வெளியில் வரலாம்.

★ ★ ★

# கலைமாமணி விருது - 1999



இயல், இசை, நாடகத் துறையில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் இயல், இசை, நாடக மன்றம் மூலம் 'கலைமாமணி' விருது வழங்கி சிறப்பித்து வருகின்றது. அதன்படி 1999ஆம் ஆண்டிற்கான 'கலைமாமணி' விருது பெறுபவர்கள் விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

## இயல்துறை

| | | | |
|---|---|---|---|
| 1. | இயற்றமிழ்க் கலைஞர் | - | பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் |
| 2. | இயற்றமிழ்க் கவிஞர் | - | ஈரோடு திரு. தமிழன்பன் |
| 3. | இயற்றமிழ்ச் சொற்பொழிவாளர் | - | குன்றக்குடி திரு. பொன்னம்பல அடிகளார் |

## இசைத்துறை

| | | | |
|---|---|---|---|
| 4. | குரலிசைக் கலைஞர் | - | திரு. கிரனூர் சி. குருராமலிங்கம் |
| | | - | கமுகுமலை திரு. ஏ. கந்தசாமி |
| 5. | வயலின் ஆசிரியர் | - | திருமதி திருவாரூர் எம். பாலம் |
| 6. | வயலின் கலைஞர் | - | செல்வியர் எம். லலிதா - எம். நந்தினி |
| 7. | வீணைக் கலைஞர் | - | திரு. டி.ஆர். சாம்பசிவன், சென்னை |
| 8. | மிருதங்கக் கலைஞர் | - | திரு. ஸ்ரீமுஷ்ணம் வி. ராஜாராவ் |
| 9. | நாதசுரக் கலைஞர்கள் | - | திரு. திருவாரூர் டி.என். ருத்ராபதி |
| | | | பூவாலூர் திரு. நாகராஜன் |
| 10. | தவில் ஆசிரியர் | - | திருப்புன்கூர் திரு. டி.ஜி. முத்துக்குமாரசாமி |
| 11. | தவில் கலைஞர் | - | திருக்கருகாவூர் திரு. டி.சிவகுருநாதன் |
| 12. | திருமறை தேவார இசைக்கலைஞர் | - | திரு. டி.வி. மீனாட்சிசுந்தரம் (பழனி கோவில் ஓதுவார்) |
| 13. | பண்பாட்டுக் கலை பரப்புநர் | - | திரு. வி.கே.டி. பாலன் |
| | | | திரு. ஆர். இராமச்சந்திரன் (அம்சத்வனி) |


## பரதநாட்டியத்துறை

| | | | |
|---|---|---|---|
| 14. | பரதநாட்டிய ஆசிரியர் | - | திருமதி சரோஜா வைத்தியநாதன், புதுதில்லி |
| 15. | பரதநாட்டியக் கலைஞர் | - | செல்வி ஹேமா ஸ்ரீபால் |
| | | | திருமதி பார்வதி ரவி கண்டசாலா |
| 16. | நடனக்கலை பரப்புநர் | - | டாக்டர் மஞ்சனா லஸ்டி நரசிம்மன் அர்த்தநாரி |
| 17. | பரதநாட்டிய மிருதங்கக் கலைஞர் | - | தஞ்சை திரு. அ. நடராஜன் |

## நாடகத்துறை

| | | | |
|---|---|---|---|
| 18. | நாடக நடிகர் | - | திரு. டி.கே. மாரியப்பன் |
| 19. | நாடக நடிகை | - | திருமதி 'பசி' சத்யா |
| 20. | நாடக ஆசிரியர் | - | திரு. எஸ். கஜேந்திரகுமார் |
| 21. | தொழில்முறையில்லாத நாடக நடிகர் | - | திருச்சி திரு. டி.எஸ். சிவப்பிரகாசம் |

## திரைப்படத்துறை



| | | |
|---|---|---|
| 22. திரைப்பட நடிகர் | - | திரு. அர்ஜுன் |
| 23. திரைப்பட நடிகை | - | செல்வி ரம்யா கிருஷ்ணன் |
| 24. திரைப்பட குணச்சித்திர நடிகர் | - | திரு. லிவிங்ஸ்டன் |
| 25. திரைப்பட குணச்சித்திர நடிகை | - | திருமதி எஸ். ராதாபாய் |
| 26. திரைப்பட நகைச்சுவை நடிகர் | - | திரு. ஆர். சுந்தரராஜன் |
| 27. திரைப்படத் தயாரிப்பாளர் | - | திரு. கோவை செழியன் |
| 28. திரைப்பட இயக்குநர் | - | திரு. விக்கிரமன் |
| 29. திரைப்பட ஒளிப்பதிவாளர் | - | திரு. தங்கர்பச்சான் |
| 30. திரைப்பட கதாசிரியர் | - | திரு. செல்வராஜ் (அன்னக்கிளி) |
| 31. திரைப்படப் பாடலாசிரியர் | - | திரு. பிறைசூடன் |
| 32. திரைப்படப் பின்னணிப் பாடகர் | - | திரு. எஸ்.என். சுரேந்தர் |
| 33. திரைப்படப் பின்னணிப் பாடகி | - | திருமதி நித்தியஸ்ரீ |
| 34. திரைப்பட இசையமைப்பாளர் | - | திரு. எஸ்.ஏ. ராஜ்குமார் |


## இசை நாடகத் துறை

| | | |
|---|---|---|
| 35. இசை நாடக நடிகர் | - | திரு. கே.ஏ. சொக்கலிங்க பாகவதர் |
| 36. இசை நாடக நடிகை | - | திருமதி எம்.எஸ். ரேணுகாதேவி, மதுரை |
| 37. இசை நாடக மிருதங்கக் கலைஞர் | - | மதுரை திரு இரா. குப்பண்ணா |

## கிராமியக்கலை

| | | |
|---|---|---|
| 38. தெருக்கூத்துக் கலைஞர் | - | குண்டையார்தண்டலம் திரு. சி. பாலகிருஷ்ணன் |
| 39. கரகக் கலைஞர் | - | இரணியூர் திருமதி ஏ. லட்சுமி, சிவகங்கை |
| 40. காவடிக் கலைஞர் | - | திரு. எஸ். பரமசிவம், மதுரை |
| 41. நையாண்டி மேள நாதசுரக் கலைஞர் | - | திரு. ஏ. மூக்கையா, கற்களத்தூர் |
| 42. நையாண்டி மேள தவில் கலைஞர் | - | திரு. ஆர். சுந்தரம் |
| 43. கிராமியப் பாடல் ஆசிரியர் | - | திரு. கருமுத்து தியாகராஜன் |
| 44. வில்லிசைக் கலைஞர் | - | கழுகுமலை திருமதி ஜி. முத்துலட்சுமி |
| 45. கிராமிய இசைக் கலைஞர் | - | திருமதி ஆர். சரசுவதி, நாகர்கோவில் |
| 46. ஒப்பனைக் கலைஞர் | - | திரு. சுந்தரமூர்த்தி |

## 'பொற்கிழி' பெறும் கலைஞர்கள்




| | | |
|---|---|---|
| 1. திரு. கே.ஆர். முத்துவீர்பிள்ளை | - | தவில் கலைஞர் |
| 2. திரு. பெருமாள்கோனார் | - | கிராமியப் பாடலாசிரியர் |

## சிறந்த கலை நிறுவனம்

கம்பன் கழகம், சென்னை.

## சிறந்த நாடகக் குழு

திரு. தில்லைராஜன் அவர்களின் "நாடக மந்திர்".



# தியாகிகள் தினம்

– முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு



பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளையொட்டி ஜூலை ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 17ந்தேதி தியாகிகள் தினமாக கடைப்பிடிக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அறிவித்தார். அதன்படி 17—7—1999 அன்று காலை 10 மணி அளவில் முதலமைச்சர் கலைஞர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் மற்றும் சென்னை மாநகர மேயர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களும் சென்னையிலுள்ள தியாகிகள் மணிமண்டபத்திற்குச் சென்று தியாகிகளின் திருவுருவப் படங்களுக்கு வணக்கம் செலுத்தியதோடு தியாகிகள் மணிமண்டபம் முன்பு அமைந்துள்ள தியாகி சங்கரலிங்கனார் சிலைக்கும், விடுதலைப் போராட்ட வீரர் ஆர்யா என்கிற பாஷ்யம் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தியாகி பாஷ்யம் அவர்களின் துணைவியார் திருமதி. கோமளம் அவர்கள் கலந்து கொண்டு சிலைக்கு மாலை அணிவித்தார்.



திரு. பாஷ்யம் அவர்களின் மகன் திரு. நரசிம்மன், மகள் திருமதி லட்சுமி ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள்.

★

# கம்பனும் - பாரதியும்

- டாக்டர் சாரதா நம்பி ஆரூரன்

*'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா – அவன்
பாட்டைக்கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா'*

- என்று பாடினார் கவிமணி. ஒரு தமிழனை இன்னொரு தமிழன் பாராட்டமாட்டான்! அதிலும் ஒரு கவிஞன் இன்னொரு கவிஞனைப் பாராட்டுதல் என்பதும் மிக அபூர்வமான ஒன்றே! மகாகவி சுப்ரமணிய பாரதியைப் பாராட்டாத புலவர்கள் இல்லை எனலாம்.

*'பாலும் சோறும் வீட்டுக்குறுதி
பாரதி பாட்டு நாட்டுக்குறுதி'*

- என்றார் சுத்தானந்த பாரதி!

இருப்பினும் சமயப் பொறை உடைய நூலாக சிலப்பதிகாரம் விளங்குகிறது, ஆனால் ஒரு புலவன் அல்லது கவிஞன் என்ற நிலையில் நின்று கம்பன் பாடிய காவியம் பாரதியாரை அதிகமாகக் கவர்ந்திருக்கலாம். எனவே கம்பனுக்கு முதலிடம் கொடுத்திருப்பார் என்று கூறலாம்,

*'கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு–நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்–மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு
வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு–நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர்–மணி
யாரம் படைத்த தமிழ்நாடு'*

பாரதியால் பாடப்பட்டவர்கள் மூவர். (வசிட்டர் வாயால் பிரம்மரிஷி என்பதைப் போல) கம்பன், வள்ளுவன், இளங்கோ, இம்மூவரைப் போல உலகில் எங்குமே கவிஞர்கள் பிறந்ததில்லை. இதை நான் உண்மையாகச் சொல்கிறேன்; வெறும் புகழ்ச்சிக்காகச் சொல்லவில்லை என்கிறார் பாரதியார்.

*'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவன்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை'*

இப்பாட்டில் உள்ள கம்பன், வள்ளுவன், இளங்கோ மூவருமே உலகமகா கவிஞர்களுள் சிறந்தவர்கள் என்று பாடிய பாரதியார் இந்த மூவருள்ளும் கம்பனுக்கு முதலிடத்தை அளித்துள்ளார்.

உலகிலுள்ள எல்லா மக்களுக்கும், எக்காலத்துக்கும் பொருந்தும் அறநூலாக விளங்குவது குறள். சமண சமயக் கொள்கைகளை விளக்கும் ஒரு நூலாக

- என்று கம்பனை முதலில் வைத்துப் பாடுகிறார் பாரதி.

கம்பன், வள்ளுவன், இளங்கோ ஆகிய மூவரையும் இவ்விரு இடங்களில் சேர்த்துக் கூறியது போல வேறொரு இடத்திலும் சேர்த்துக் கூறுகிறார்!

*'யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல் வள்ளுவர் போல்
இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை; உண்மை, வெறும்
புகழ்ச்சி யில்லை'*

- என்று பாடும்போதும் முன்னர் அமைத்த வரிசையிலே அமைத்துக் காட்டியுள்ளார்!

தம்முடைய சுயசரிதையில், 'கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்' - என்று சுட்டுகின்றார்!

கம்பன் காப்பியத்தில் மூழ்கித் திளைத்த எவரும் கம்பனுடைய சொல்லாற்றலையும், அளக்கலாகா அறிவுத்



திறனையும், வியக்காமல் இருக்க முடியாது ! செயற்கரிய செய்த கம்பன் தன் ஒப்பற்ற படைப்பால் மனித சமுதாயத்தின் மாண்பினை உயர்த்தியதால் பாரதி அடைந்த பெருமையும், பெருமிதமும் 'மானிடன்' என்ற ஒரே சொல்லால் உணர்த்தப்படுகின்றன.

பாரதியார் பாடல்களையும், கம்பன் பாடல்களையும் படிப்போர்க்கு இவ்விரு மகாகவிஞர்களின் மனப் போக்கும் பெரும்பாலான இடங்களில் ஒத்துப்போகக் காணலாம்.

### *காதல் செய்வீர் ஜெகத்தீரே*

பாரதியார், கம்பன் இருவருமே காதல்மணத்தை ஆதரிக்கின்றனர்.

*'காதலர் இருவர் கருத்தொருமித்து*
*ஆதரவு பட்டதே இல்லற வாழ்க்கை'*

- என்பார் தமிழ் மூதாட்டி அவ்வை ! இக்காதல் வழிப்பட்ட கற்பு வாழ்வே பாரதியும் கம்பனும் காட்டுவது.

*'காதலினால் மானுடர்க்குக் கலவி யுண்டாம்;*
*கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்;*
*காதலினால் மானுடர்க்குக் கவிதை யுண்டாம்;*
*கானமுண்டாம் சிற்பமுதற் கலைக ளுண்டாம்;*
*ஆதலினால் காதல்செய்வீர்; உலகத் தீரே*
*அஃதன்றோ இவ்வுலகத் தலைமை யின்பம்;*
*காதலினால் சாகாம லிருத்தல் கூடும்;*
*கவலைபோம், அதனாலே மரணம் பொய்யாம்'*

- என்று காதலைப் போற்றி பாடுகிறார்.

*'காதல் காதல் காதல்*
*காதல் போயிற் காதல் போயிற்*
*சாதல் சாதல் சாதல்'*

- என்று காதலற்ற வாழ்வைக் காட்டிலும் சாதல் என்பது இனிமையானது என்று காதலின் சிறப்பை உயர்த்திக் காட்டுகின்றார் பாரதியார் !

இக்காதலின் அருமையை உணர்ந்தே இராமன், சீதை திருமணத்தைக் காதல் வழிப்பட்ட திருமணமாகக் காட்டுவான் கம்பன் !

வான்மீகி, சனகன் வைத்திருந்த வில்லை முறித்த பின்னரே இராமன் சீதையைக் கண்டதாகவும், திருமணம் புரிந்து கொண்டதாகவும் தன் இராமாயணத்தில் காட்டியுள்ளார். ஆனால் கம்பனோ தம் காப்பியத்தை மரபுநிலை வழுவாமல் இயற்றவேண்டும் என எண்ணினான். அதனால் வில்லை முறிப்பதற்கு முன்னமே இராமன் சீதையைச் சந்திக்கும் வண்ணம் செய்கிறான் ! 'கற்பெனப்படுவது களவின் வழித்தே' என்று தொல்காப்பியர் கூறும் நெறியைப் பின்பற்றிக் கூறினான் !

கன்னிமாடத்தில் நிற்கிறாள் சீதை ! இலக்குவனும் முனிவரும் தொடர இராமன் தெருவில் நடந்து கொண்டிருக்கிறான். காப்பியத் தலைமாந்தர் இருவரும் சந்திக்கின்றனர்; எங்ஙனம்?

*எண்ணஅரு நலத்தினாள் இனையள் நின்றுழி,*
*கண்ணொடு கண்இணை கவ்வி, ஒன்றைஒன்று*
*உண்ணவும், நிலைபெறாது உணர்வும் ஒன்றிட,*
*அண்ணலும் நோக்கினாள்; அவளும் நோக்கினாள்*
*(மிதிலைக்காட்சி.35)*

இப்பாடல் தமிழ் இலக்கணத்தில் கூறப்படுகின்ற 'காட்சி' என்ற துறையின் பாற்படும். Love at First Sight என்று ஷேக்ஸ்பியரும் 'கண்டதும் காதல்' பற்றிக் கூறுவார். மொழியும், நாடும் வேறென்றாலும் மனித உணர்வுகள் ஒன்றுதானே.

*'கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்*
*வாய்ச்சொற்கள்*
*என்ன பயனும் இல'*

- என்று இக்காட்சியைப் பற்றி வள்ளுவர் குறிப்பிடுவார்.

### *ஆடவர் கற்பு*

பொதுவாக மகளிரின் கற்பொழுக்கத்தைப் பற்றித் தான் இலக்கியங்கள் பாராட்டுவது வழக்கம் ! ஆனால் கம்பனும் பாரதியும் ஆடவர் கற்பையும் வலியுறுத்து வதைக் காணலாம் !

*'கற்பு நிலையென்று சொல்லவந்தார், இரு*
*கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்'*

- என்று ஆடவருக்கும், பெண்களுக்கும் கற்பு எனப்படுவது ஒரே நிலையில் வைக்கப்படவேண்டும், பேசப்படவேண்டும் என்று வலியுறுத்துகிறார் பாரதியார்.

கம்பனது காவிய நாயகனிடம் இவ்வுயர்ந்த பண்பினைக் காண்கிறோம்.

*'இந்த இப்பிறவிக்கு இருமாதரைச்*
*சிந்தையாலும் தொடேன்'*

**- என்று உறுதியுடன் வாழ்ந்தவன் இராமன்.**

'குலத்து மாதருக்குக் கற்பு இயல்பாகுமாம்' என்பார் பாரதி. இராமன் ஆணையால் நெருப்பிடைப் புகுகின்றாள் சீதை. சீதையின் கற்பாகிய தீ, அக்கினிக் கடவுளின் வலிமையையும் அடக்கிவிட்டதாம்.

*'தீந்ததவ் வெரியவள் கற்பின் தீயினால்'*

- என்கிறான் கம்பன்.

### மொழிப்பற்று

பாரதியின் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் கம்பனது நாட்டுப்பற்றுடனும், மொழிப்பற்றுடனும் ஒத்து விளங்கக் காணலாம்.

'தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்று விரும்பினார் பாரதியார்.

*'சேமமுற வேண்டுமெனில்*
*தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச்*
*செய்வீர்'*

- என்று கட்டளையிட்டார்.


*'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்–கலைச்*
*செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'*

- என்று வேண்டினார்!

அதுமட்டுமல்ல, தமிழின் சுவை கண்டவர் தெய்வ வாழ்க்கையையே வாழலாம் என்றும் உறுதியாகக் கூறுகின்றார்!

*'தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்*
*இங்கமரர் சிறப்புக் கண்டார்'*

- என்கிறார்!



அகத்தியரைப் பற்றிக் கூறுமிடத்துக் கம்பனின் தமிழ் மொழிப்பற்று புலனாகும். ***'என்றுமுள தென்தமிழை இசை கொண்டான்'*** என்கிறான். அகத்தியர் வடநாட்டிலிருந்து தென்நாட்டிற்கு வந்து தமிழ் பயின்று, தமிழால் புகழ்கொண்டார் என்ற கருத்தைக் கூறும்போது இங்ஙனம் கம்பன் கூறுகின்றான்.

என்றுமுள தமிழ், தென்மொழி, இசை கொண்ட தமிழ் இவ்வாறெல்லாம் உள்ள தமிழைக் கற்று அகத்தியர் புகழ்கொண்டார் என்று கூறுவது கம்பனின் தாய்மொழிப் பற்றை விளக்கும்.

### நாட்டுப்பற்று

பாரதியாரின் நாட்டுப்பற்று-உலகறிந்தது.

*'பாருக்குள்ளே நல்ல நாடு–எங்கள்*
*பாரத நாடு" – எனவும்,*

*'பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்–மிடி*
*பயங்கொல்லுவார் துயர்ப்பகை வெல்லுவார்'*

- என்று பாரதநாட்டைப் புகழ்வார்.

*'செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்*
*தேன்வந்து பாயுது காதினிலே – எங்கள்*
*தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு*
*சக்தி பிறக்குது மூச்சினிலே'*

- என்று தமிழ்நாட்டையும் பாடினார் பாரதியார்.

கம்பராமயணத்தின் நாட்டுப்படலம் முழுவதும் கம்பனின் நாட்டுப்பற்றை விளக்கும் பாடலாகவே அமைந்துள்ளது எனலாம்.

'காவிரி நாடன்ன கழனி நாடு' என்று சோழ நாட்டை ஒத்த கழனிகளை உடைய கோசல நாடு என்று கோசலநாட்டைச் சோழ நாடாகவே சிறப்பித்துள்ளான்.

*'வண்மை இல்லையோர் வறுமை இன்மையால்*
*திண்மை இல்லைஓர் செறுநர் இன்மையால்*
*உண்மை இல்லைபொய் உரை இல்லாமையால்*
*வெண்மை இல்லைபல் கேள்வி மேவலால்'*
*(நகர.53)*

- என்ற பாட்டில் வறுமையற்ற, வீரமிக்க, வாய்மையும் கல்வி ஞானமும் நிறைந்த கோசலநாட்டை, காந்தியடிகள் கனவு கண்ட இராம இராஜ்யத்தைக் காண்கிறோம். பாரதியார் காண விரும்பிய சுதந்திர இந்தியாவும் இத்தகையதே.

### உயிரினம் அனைத்தும் ஒன்றே

உயிரினம் அனைத்தும் ஒன்றென உணரும் தன்மையைப் பாரதியிடமும் கம்பனிடமும் காண்கிறோம். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பார் வள்ளுவப் பெருந்தகை. கடவுளின் அவதாரம் என்று சொல்லத்தக்க இராமனும், வேடுவர் குலத்தில் பிறந்த குகனும், குரங்கினத்திற் பிறந்த சுக்கிரீவனும், அரக்கர் குலத்தில் வீடணனும், பறவை இனத்துச் சடாயுவும் உடன்பிறந்தவர்களாகச் சகோதர உணர்வுடன் கம்பனால் மதிக்கப்படுகின்றனர்.

**நாம் அனைவரும் பிறக்கும்போது, சமமாகத்தான் பிறக்கின்றோம். நம் அறப்பண்புகள்தான் நம்மை வேறுபடுத்துகின்றன.**

**– லத்தீனப் பழமொழி**

*"துன்புஉளது எனின்அன்றோ சுகம்உளது?*
*அதுஅன்றிப்*
*பின்பு உளது; 'இடை, மன்னும் பிரிவு உளது' என,*
*உன்னேல்;*
*முன்பு உளெம், ஒரு நால்வேம்; முடிவுஉளது*
*எனஉன்னா;*
*அன்பு உள, இனி, நாம் ஓர் ஐவர்கள் உளர்*
*ஆனோம்"*

(வனம்புகு படலம்.43)

- என்று கூறி இராமன் குகனை உடன்பிறப்பாக ஏற்கிறான்.

*"குகனோடும் ஐவர் ஆனோம் முன்பு; பின் குன்று*
*சூழ்வான்*
*மகனொடும் அறுவர் ஆனோம்; எம்முழை*
*அன்பின் வந்த*
*அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர்*
*ஆனோம்"*

(இலங்கை 143)

- என்று வீடணனைத் தழுவிக் கொள்கிறான் இராமன்!

இவ்வுலகில் மனிதரெல்லோரும் உடன் பிறந்தவர்களைப் போன்றவர்கள் என்ற உலகச் சகோதர அன்பைப் (Universal Brotherhood) பாரதியிடமும் காண்கிறோம்!

*'காக்கை குருவி எங்கள் ஜாதி நீள்*
*கடலும் மலையும் எங்கள் கூட்டம்*
*நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை*
*நோக்கநோக்கக் களியாட்டம்'*

- என்று எல்லா உயிர்களையும் ஒரே சாதியாகக் காண்கிறார். அதுமட்டுமா? தன் சீடனை நோக்கிக் கூறுகிறார்.

*'கேளப்பா, சீடனே! கழுதை யொன்றைக்*
*கீழான பன்றியினைத் தேளைக் கண்டு*
*தாளைப் பார்த்திருகரமும் சிரமேற்கூப்பிச்*
*சங்கர சங்கர என்று பணிதல் வேண்டும்'*

- என்கிறார். "எல்லா உயிரிலும் நானே இருக்கிறேன்" என்று கீதையில் கண்ணன் கூறியதை வாழ்வியல் நெறியாக வாழ்ந்து காட்டியவர் மகாகவி பாரதி.

***சமயப்பொறை***

சமயப் பொறையுடைவர்களாகப் பாரதியாரையும், கம்பனையும் நாம் காண்கிறோம். அனைத்துச் சமயங்களும் ஒன்று என்கிறார் பாரதியார்.

***'தீயினைக் கும்பிடும் பார்ப்பார் – நித்தம்***
***திக்கை வணங்கும் துருக்கர்,***
***கோயிற் சிலுவையின் முன்னே–நின்று***
***கும்பிடும் யேசு மதத்தார்***
***யாரும் பணிந்திடும் தெய்வம் – பொருள்***
***யாவினும் நின்றிடும் தெய்வம்***
***பாருக்குள்ளே தெய்வம் ஒன்று; இதில்***
***பற்பல சண்டைகள் வேண்டாம்"***

- என்கிறார். 'சாதிப் பிரிவுகள் வேண்டாம் அன்பு தன்னில் செழித்திடும் வையம்' என்று அறிவுறுத்து கின்றார்.

கம்பனுடைய காலம் சைவ, வைணவ சமயங்களிடையே போராட்டங்கள் நிகழ்ந்த காலம், அவ்வேறுபாட்டை நீக்கும் வகையில்,

***'அரன் அதிகன்; உலகு அளந்த அரிஅதிகன்***
***என்று உரைக்கும் அறிவிலோர்க்குப்***
***பரகதி சென்று அடைவு அரிய பரிசேபோல்'***

*(நாடவிட்ட படலம்-24)*

- என்று பாடுகிறான்.

எனவே சமயப்பொறை வாழ்வின் தேவை என்பதையும் சமயம் சமூகத்தை இணைக்கும் பண்பாட்டுச் சின்னமே என்பதையும் இருவர் பாடல்களும் வலியுறுத்துகின்றன.

***அறநெறி முதற்றே அரசின் கொற்றம்***

'பாவிகம் என்பது காப்பியப் பண்பே' என்பார் தண்டியாசிரியர், பாஞ்சாலி சபதத்தில்,

***'தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்***
***தருமம் மறுபடியும் வெல்லும்'***

என்கிறார் பாரதியார். கம்பனும் தம் காப்பியத்தில் 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' எனும் உண்மையை நிலை நிறுத்துகின்றான்.

**அறிவுக்கு இந்த வையகம் எப்போதுமே தன் வணக்கத்தைச் சொல்லும். திறமைக்கு ஆதரவைத் தரும். தூய உள்ளமதை வரவேற்கும்.**

**– இங்கர்சால்**

***கற்பனையும், நடைமுறையும்***

கம்பனுக்கும், பாரதிக்கும் இடையில் நூலிழை போல் அமைந்துள்ள வேறுபாடும் உண்டு!

உயர்வு நவிற்சியாக, அமைந்துள்ள பல கற்பனைகளைக் கம்பனில் காணலாம். பாரதியார் பாடல்களில் அவ்வாறு இல்லை. ஏனென்றால் கம்பன் படைத்தது காவியம்! பாரதி பாடியது தேசீயம்!

***"சேலுண்ட வொண்கணாரிற் திரிகின்ற***
***செங்காலன்னம்***
***மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய***
***மழைலைப்பிள்ளை***
***காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்புச்***
***சோர்ந்த***
***பாலுண்டு துயிலப் பச்சைத் தேரை தாலாட்டும்***
***பண்ணை***

*(நாட்டு.13)*

- என்று பாடுவான் கம்பன்.


இது போன்ற கம்பனின் கற்பனைகள் அக்கால இலக்கியப் போக்கை ஒட்டியனவேயன்றி வேறன்று! பாரதியாரின் பாடல்கள் கற்பனை நயத்துக்காகப் பாடப்பட்டதைவிட அவை எழுப்பிய சுதந்திர வேகத்துக்காகவே பாராட்டப்பட்டன!

கவிச்சக்கரவர்த்தி கம்பன் காப்பிய உலகின் நாயகன்; பாட்டுக்கொரு புலவன் மகாகவி பாரதி தேசியம் வளர்த்த தமிழ்ப் பாடல்களின் நாயகன். கம்பன் கவிதை உணர்ச்சியைத் தூண்டினான்; பாரதியார் சுதந்திரப் பயிரை வளர்த்தார். காலத்தால் மாறுபட்டாலும் கருத்தொருமித்த கவிஞர்களாகவே இவ்விருவரையும் காண்கிறோம்.

# ஓ மழைக் காலமே!

– க.துரியானந்தம்






பருவம் — பொய்யாது பெய்தலையுடைய முகில் தான் கிடந்த மலையை ஒருமுறை வலம் வந்து, பொங்கி எழுந்து புனல் போல் பொழிந்து தள்ளியது.

சூல் கொண்ட மங்கை ஒருத்தி தான் முந்நூறு நாட்கள் சுமந்து பெற்ற பிள்ளையைக் கண்டு மகிழ்வது போன்று கருக்கொண்ட மேகம் தண்ணீராய்ப் பொழிவது கண்டு வான மங்கை மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினாள்.

அன்னை பூமியோ அகம் மகிழ்ந்தாள். வாராது வந்த மாமணி போல் பெய்த மழையாலே இளவேனிலும் முதுவேனிலும் காய்ந்தும் வறண்டும்போய் இருந்த அவள் உடலும் உள்ளமும் குளிர்ந்தது. அவள் அகமும் முகமும் ஒருசேர மலர்ந்தாள். அப்போது...

மிக்கக் குளிர் உண்டாயிற்று. எங்கு நோக்கினும் வெள்ளக்காடாகவே தோன்றிற்று. ஆடுகளையும் மாடுகளையும் மேய்த்துக் கொண்டிருந்த இடையர்கள் எனப்படும் கோவலர்கள், மழையையும் அதனால் பெருகி ஓடும் வெள்ளத்தையும் வெறுத்தனர். தாம் மேய்த்துக் கொண்டிருந்த ஏற்றையுடைய முந்நிரைகளையும் மேடாகிய முல்லை நிலத்தில் மேய விட்டு, தாம் அவ்விடத்தை விட்டு வேறு ஒரு இடத்திற்குச் சென்றார்கள். அந்தத் தனிமை வேறு அவர்களை மழை போல் வருத்தியது.

அக்கோவலர்கள் காந்தள் மலர்களால் ஆன நெடிய மாலையை அணிந்து இருந்தனர். அம் மலர் மாலை நீர் உடைத்தலானே



அலைப் புரண்டு கலக்கரமய் தத்தம் உடம்பிடத்தே கொண்ட பெரிய குளிர்ச்சி வருத்து கையாலே மிக்கத் துன்பம் எய்தினார்கள். அக்குளிர் அவர்களை மிகவும் வாட்டிற்று. குளிர் மிகுதியால் அவர்களுடைய பற்கள் பறை கொட்டின.

மழை மனிதர்களை மட்டுமா வாட்டிற்று? இல்லை, இல்லை. அது விலங்குகளைக் கூட விடவில்லை. விலங்குகள் மேய்தல் தொழிலை மறந்து ஓரிடத்திலே போய் ஒடுங்கிக் கொண்டன. அப்போதும் எதையாவது செய்து கொண்டு இருக்கும் குரங்குகள் கூட மழை ஏற்படுத்திய குளிரால் மிக்க நடுக்கமும் துன்பமும் எய்தி வெறுமனே கிடந்தன.


அக்குளிர், பறவைகளையும் விட்டு வைக்கவில்லை. அப்போது சுழன்று வீசிய பெருங்காற்றால் மரத்தில் உறைந்திருந்த பறவைகள் நிலத்தில் பொத்து பொத்து என்று வந்து விழுந்தன.

கன்றுகள் குளிர் மிகுதியைத் தன் தாயின் அரவணைப்பில் போக்கிக் கொள்ளலாம் என்று தாய்ப் பசுவின் அருகே போய் நின்று அதன் மடியில் தம் வாயை வைத்தன. ஏற்கெனவே குளிராலும் மழையாலும் துன்பப்பட்டுக் கொண்டிருந்த அப்பசுக்கள் மிக்க கோபமுற்று, அக்கோபத்தைத் தன் அருகில் நின்று கொண்டிருந்த தம் கன்றுகளிடம் காட்டின. எவ்வாறு? மிக்க அன்பு கொண்டு ஒழுகும் தம் கன்றுகளைத் தம்முடைய கால்களால் எட்டி உதைத்துத் தள்ளின. மழையால் உண்டான அக்குளிரைத் தாங்க முடியாமல் மலையும் நடுங்கிற்று.

மழை மிகுதியால் ஆறுகளிலும் நீர் நிறைந்து இருந்ததால் மிக்க மகிழ்ச்சி அடைந்த மீன்கள் அந்நீரோட்டத்தில் எதிரேறிச் சென்றன. அப்போது மணற்பரப்பில் நின்று கொண்டிருந்த கொக்குகளும் நாரைகளும் அம்மீன்களைக் கவர்ந்து உண்டு மகிழ்ந்தன.

அம் மழையில் தாவரங்களின் நிலை எவ்வாறு இருந்தது? அகன்ற இடத்தையுடைய வயல்களில் நீர் நிறைந்து இருப்பதால் நெற்கதிர்கள் முற்றி வளையாமல் நின்று கொண்டிருந்தன. பாக்கு மரத்தின் மணி நிறைக் கழுத்தில் உள்ள மடலிடத்தே விரிந்த பாளையிடத்து நுண்ணியநீர் திரண்டிருந்தது. தெளிந்த நீரை அகத்தேயுடைய பச்சைக் காய்கள் இனிமையுண்டாகுமாறு முற்றின பல வண்ண மலர்களிலும் மழைநீர் பட்டு அவை மிக்க அழகுடையவனாகத் தோன்றின.

ஆறு கிடந்தாற் போன்ற அகன்ற தெருக்களிடத்தே வலிமையுடைய தோள் களையும் முறுக்குண்ட உடம்பினையும் உடைய ஆடவர் சிலர் வண்டுகள் மொய்க்கக் கூடிய கள்ளை மிக அதிகமாக உண்டு அதனால்



மகிழ்ச்சி மிக்குற்று, சரிந்த ஆடையைப் பற்றிக் கூடக் கவலைப் படாதவராய் அந்திப் பொழுதின் கண் தம் மனம் விரும்பிய விடத்தே அலைந்து திரிந்து கொண்டிருந்தார்கள். மழையோ அதனால் உண்டான குளிரோ அவர்களை ஒன்றும் செய்யவில்லை என்று சொல்வதைவிட அவற்றைப் பற்றிக் கவலைப்படும் நிலையில் அவர்கள் உள்ளம் இல்லாமல் மதி மயங்கி அலைந்தனர் என்று கூறவே சாலப் பொருந்தும்.

**ஒரு மனிதன் சிந்திப்பது சிறந்தது; ஒரு மனிதனைச் சிந்திக்க வைப்பது அதனினும் சிறந்தது.**
**- கவிஞர் வைரமுத்து**

சங்கு வளையல்களை அணிந்தும் மூங்கில் போன்ற தோள்களையும் முத்துப் போன்ற பற்களையும் குளிர்ச்சி பொருந்தி இருக்கின்ற கண்களையும் உடைய மகளிர் மாலை நேரத்தில் குளிரையும் மழையையும் பொருட்படுத்தாமல் தம் இல்லங்களில் விளக்கேற்றி நெல்லையும் மலரையும் சிதறி இல்லுரைத் தெய்வத்தைக் கைக்குவித்து வணங்கினர்.

அம்மகளிரும் குளிரால் துன்பம் எய்தி, கத்தூரியையும் சந்தனத்தையும்



அணியாமல், தம் கூந்தலில், குளிர்ந்த மலர் மாலைகளை இட்டு முடியாமல் மங்கலமாதல் வேண்டி, ஒரு சில மலர்களை இட்டு முடிந்தார்கள். எல்லோருடைய இல்லங்களிலும் குளிரை விரட்டி அடிக்க மயிர்ச் சாந்தமாகிய விறகிலே தீமூட்டி, அதன் கண் கரிய அகிலையும் கண்ட சருக்கரையும் இட்டுப் புகைத்தனர்.

இல்லங்களில் இளவேனிற் காலப் படுகைக்கு இன்றியமையாத் தென்றல் காற்றைத் தரும் பலகணிகளின் திண்ணிய கதவுகள் நன்கு பொருத்தித் தாழிடப்பட்டு வாளாக் கிடந்தன. யாரும் குளிர்ந்த நீரைக் கூடக் குடியாது மறந்தனர்.

அக்குளிர் காலத்தே, கணவரைப் பிரிந்திருந்த மகளிரை மழையும் குளிரும் வாட்டியதை விடத் தங்கள் அன்புக்குரிய கணவருடைய பிரிவே மிகவும் அதிகமாக அவர்களை வாட்டிற்று.

இத்தகைய மழைக்காலக் காட்சியை நமக்குப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.

முடிகெழு வேந்தர் மூவருள்ளும் படை விளங்கு தடக்கைப் பாண்டியர் குலத் தோருள் தலைசிறந்து விளங்கிய வேந்தனாகிய தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனைப் பாட்டுடைத் தலைவனாக்கி அவர் நெடுநல்வாடை என்னும் அழியா இலக்கியத்தைப் படைத்துள்ளார்.

அச்செந்தமிழ்த் தீம் பனுவலில் வரும் காட்சிகளே நாம் மேற்கண்ட மழைக்கால நிகழ்ச்சிகள்.

இந்நெடுநெல்வாடை சங்க இலக்கியங்களுள் ஒன்று. பத்துப் பாட்டுள் ஏழாவதாகத் திகழ்வது.

# வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவுகளை புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்புச் சலுகை

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் மேற்கொண்டுள்ள பதிவுகளை மூன்று வருடங்களுக்கு ஒருமுறை புதுப்பித்து வரவேண்டும். இவ்வாறு புதுப்பித்து வருவதில் 1996, 1997 மற்றும் 1998ஆம் ஆண்டுகளில் பதிவுகளை புதுப்பிக்கத் தவறியவர்கள், சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் வேலைவாய்ப்பு அலுவலக பதிவின் அடை யாள அட்டையின் நகல்களுடன் பதிவஞ்சலில் மனு செய்தோ அல்லது நேரடி தொடர்பு கொண்டோ பதிவுகளை புதுப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். 1996ஆம் ஆண்டிற்கு முன் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு இச்சலுகை வழங்கப்படமாட்டாது. இச்சலுகைக்கு மனு செய்யும் மனுதாரர்கள் தங்களுடைய வேலைவாய்ப்பு அடையாள அட்டை, 1996க்கு முன் முறையாகப் பதிவினைப் புதுப்பித்து வந்தமைக்கான ஆதாரம் ஆகியவற்றின் செராக்ஸ் நகல்களை இணைத்து அளிக்க வேண்டும்.

மேற்படி புதுப்பித்தல் சலுகை கோரும் மனுதாரர்கள் அவர்களின் கல்வி/பயிற்சி/அனுபவச் சான்று ஆகியவற்றை வேலைவாய்ப்பு அலுவலகப் பரிசீலனைக்காக சமர்ப்பிக்க வேண்டும். 1996, 1997 மற்றும் 1998ஆம் ஆண்டுகளில் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியிருந்து, பழைய பதிவு மூப்புகளை இழந்து ஏற்கெனவே பதிவு செய்திருந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் புதிதாக பதிவு செய்திருந்தாலோ அல்லது வேறு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் புதிதாக பதிவு செய்திருந்தாலோ அம்மாதிரியான மனுதாரர்களுக்கும் அவர்களின் முந்தைய இரண்டு புதுப்பித்தல் விவரங்கள் உதவி செய்யப்பட்டு புதுப்பித்தல் சலுகை வழங்கப்படும். மேற்படி புதுப்பித்தல் சலுகைக்காக 6–9–1999 வரை மனுக்கள் பெறப்படும். இத்தேதிக்குப் பின்னர் பெறப்படும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.


# பூங்காற்றே...!

– கவிமாமணி செ.சு. மலரடியான்

பூங்காற்றே பூங்காற்றே கொஞ்சம் நில்லு
  புவிமீது உயிர்காக்கும் தாய்நீ என்னும்
பாங்குதனை அறியாதார் பாரில் உண்டா?
  பாங்குதனை அறிந்திருந்தும் காற்றே உன்னில்
தீங்கிழைக்கும் நச்சுதனைக் கலக்கின் றார்கள்
  மரக்கன்று வளர்ப்பதனால் மாசு நீங்கும்;
மாண்புதனை அறிந்தவர்கள் மரத்தை வெட்டி
  தரங்கெட்ட வழிகளிலே பொருளைச் சேர்த்துத்
தன்னலத்தைப் பெருக்குவதற்கு முனைகின் றார்கள்!
  உரங்கொட்டிப் பயிருக்கு விளைச்சல் கூட்டி
உயிர்போக்க நோய் கொடுக்கும் மகசூல் கண்டார்
  திரள்கின்ற மழைமேகம் வறளும் போக்கு
தேசத்துக் காடுகளின் அழிவில்தானே!

நாகரிகம் என்று பலர் பேசிக் கொண்டு
  நாறுகின்ற புகைப்பிடிப்பை நடத்து கின்றார்
ஏகமென சாக்கடையே தெருவென் றாச்சு
  இதமான சூழலெல்லாம் இழக்கப் போச்சு!
சோகமுடன் நித்தமிங்கு புனிதம் தன்னின்

சுழிமாறி வாழ்ந்திடவா புனிதம் பெற்றோம்?
  பண்பாட்டைக் கொண்டாடும் இந்த நாட்டின்
பதிவேட்டில் அன்பாலே புனிதம் தீட்டு
  கொண்டாட்டம் குதூகலங்கள் என்ப தெல்லாம்
குடிசைக்கும் பொதுவாக வேண்டும் என்ற
  பொன்பாட்டுச் சுதந்திரத்தின் பூர தத்தைப்
பொறுப்பாக வடிவமைத்துப் பெற்று யர்ந்தோம்
  துண்டாடி இயற்கை வளம் வறட்சி கொள்ளத்
தூண்டுதலாய் அமையாதீர் என்றே கூறு!



# எங்கள் ஊர் பிரச்சினை

பிரச்சினை :

எங்கள் ஊர் கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோயில் வட்டத்தில் ஸ்ரீமுஷ்ணம் அருகில் உள்ள பூண்டி, குணமங்கலம் எல்லையில் ஐயனார் கோயில் – மதுரை வீரன் கோயில் உள்ளது. அங்கு ஏராளமான பக்தர்கள் நாளுக்கு நாள் அதிகமாக வந்த வண்ணம் உள்ளனர். அதற்கு பாதை சரியில்லை. ஒரே முள்ளாக உள்ளது. அதிலும் ஏரியில் வாய்க்கால் ஒன்று உள்ளது. அதில்



பாலம் ஒன்று அமைத்துக் கொடுத்தால் பக்தர்களுக்கு வசதியாக இருக்கும். பாதையை சரிசெய்து மண் அடித்து தார்சாலை அமைத்து தர வேண்டுகின்றோம்.

*– ஊர் பொது மக்கள், பூண்டி, குணமங்கலம், கடலூர் மாவட்டம்.*

* * *

தீர்வு :

**பூண்டி குணமங்கலம் எல்லையில் ஐயனார் கோயில் சாலையை சீர்செய்யும் பணி 1997–98ஆம் ஆண்டின் ஊராட்சி நிதியில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.**

**பூண்டி குணமங்கலம் சாலையிலுள்ள முட்கள் நீக்க ஊராட்சி நிதியில் பணி மேற்கொள்ளப்பட்டு இவ்வூராட்சிக்கு உட்பட்ட 2 கி.மீ. சாலையை சீர் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.**

**தெருச்சாலைகளை தார்ச்சாலையாக மாற்ற வரும் நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.**

*– மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் மாவட்டம்.*

* * *

பிரச்சினை :

சேலம் மாவட்டம் சங்ககிரி தாலுக்கா மகுடஞ்சாவடி ஒன்றியத்தைச் சார்ந்த ஏகாபுரம் கிராமம், சுரட்டூரில் 500 பேர் வசித்து வருகிறோம். எங்கள் ஊருக்கு குடிதண்ணீர் எடுக்க ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்றுதான் தண்ணீர் எடுத்து வரவேண்டும். அதுவும் போர்வெல் பைப் சுடுகாட்டில் உள்ளது. இதற்கு எங்கள் ஊருக்கு ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்து பைப் மூலம் குடிதண்ணீர் விடவேண்டி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் ஏகாபுரம் ஊராட்சித் தலைவருக்கும் புகார் மனு அனுப்பிவிட்டது. ஆனால் இதுநாள் வரை எந்த பதிலும் வரவில்லை. எங்கள் ஊரின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றினை விரைவில் அமைத்திடக் கேட்டுக் கொள்கிறேன்.

*– பொதுமக்கள் சார்பாக, கே.ரமணிகாந்த், சேலம் மாவட்டம்.*

தீர்வு :

**சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம் ஏகாபுரம் கிராம குடியிருப்பான கரட்டூருக்கு நடப்பு நிதியாண்டில் (1999–2000) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்டம் இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.**

*– நிர்வாக பொறியாளர், த.கு.வ. வாரியம், சேலம் – 600 004.*

* * *

பிரச்சினை :

எங்கள் மூக்குப்பறி கிராமத்தில் அருகில் நாசரேத் தேர்வுநிலைப் பேரூராட்சி உள்ளது. அதன் அருகில் கச்சனாவினை, நாலுமாவடி, வெள்ளைமடம், உடையார்குளம் மற்றும் கடையனோடை போன்ற சிற்றூராட்சிகள் உள்ளன. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் அனகோர் சென்னையில் வியாபாரம் மற்றும் அரசு அலுலவகங்களில் வேலை செய்கிறார்கள்.

இந்தப் பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கிறிஸ்துமஸ், தீபாவளி, பொங்கல் மற்றும் பள்ளி முழு ஆண்டு விடுமுறை தினங்களில் நாசரேத் வருவதற்கு விரைவு சொகுசு பேருந்து கிடையாது. ஆதலால், இப்பகுதிமக்கள் நன்மை கருதி தினசரி சென்னையிலிருந்து நாசரேத், நாசரேத்திலிருந்து சென்னைக்கு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் விரைவு சொகுசு பேருந்து இயக்கினால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் நன்மை அடைவார்கள். ஆதலால் போர்க்கால நடவடிக்கை எடுத்து தினசரி விரைவு சொகுசு பேருந்து இயக்கிட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

*– மு.செல்லக்கனி, தலைவர், மூக்குப்பறி சிற்றூராட்சி, தூத்துக்குடி மாவட்டம்.*

**தீர்வு :**

**வழித்தடம் 193 உடன்குடி – சென்னைக்கு நாசரேத் வழியாக 4 சாதா பேருந்துகள் 4 ஒருவழிப்பாதை பயணமாக இயக்கப்பட்டு வருகின்றது. மேற்படி பேருந்தில் நாசரேத் பயணிகளின் நலன் கருதி தலா 6 இருக்கைகள் நாசரேத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.**

*மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு கோட்டம்) லிமிடெட், சென்னை–2.*

★ ★ ★

**பிரச்சினை :**

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் சாத்தப்பாடி கிராமத்தில் அரசு பொது நூலக துறையின் கீழ் செயல்படும் கிளை நூல்நிலையம் உள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக நூல் நிலையம் சரிவர இயங்குவது கிடையாது. அங்கு வேலைசெய்யும் திரு. எஸ். சங்கர் அவர்கள் போதை பொருளுக்கு அடிமையாகி, நூல் நிலையத்திலேயே சாராயம், பிராந்தி குடித்துவிட்டு நூல்நிலையத்தைப் பூட்டிவிட்டு படுத்துக்கொள்வார்.

எங்கள் ஊரில் நூலகம் இருந்தும் எங்களால் பயன்படுத்த முடியாமல் தவிக்கின்றோம். செய்தி தாள்கள் கூட படிக்க முடியவில்லை. எனவே உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க பணிவுடன் கேட்டுக் கெள்கிறோம்.

*– வாசகர்கள் வட்டம், சாத்தப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.*

**தீர்வு :**

**சாத்தப்பாடி கிளை நூலகத்தில் மாற்றுப் பணி அடிப்படையில் பணியாற்றி வந்த நூலகர் திரு.எஸ்.சங்கர் அக்கிளை நூலகத்திலிருந்து ஆத்தூர் கிளை நூலகத்திற்கு சென்று பணியாற்ற பணிக்கப்பட்டு தற்போது மூன்றாம் நிலை நூலகர் திரு.கு.பொன்னன் என்பவர் சாத்தப்பாடி கிளை நூலகத்தில் மாற்றுப் பணியில் நியமனம் செய்யப்பட்டுள்ளார். சாத்தப்பாடி கிளை நூலகம் தற்போது எந்தவித புகாருக்கும் இடமின்றி நன்றாக செயல்பட்டு வருகிறதென்று சம்மந்தப்பபட்ட மாவட்ட நூலக அலுவலர் மூலம் அறியப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.**

*– பொது நூலக இயக்குநர், 737/1, அண்ணாசாலை, சென்னை – 600 002.*

★ ★ ★

**பிரச்சினை :**

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பெத்த நாயக்கன் பாளையம் பேரூராட்சியின் 5வது வார்டு, பெண்களுக்கான வார்டு ஆகும். கடந்த 2 வருடங்களில் அரசினால் 1 கோடி ரூபாய் மக்களின் நலத்திட்டங்களுக்கு கிடைத்தும் மேற்படி வார்டுக்கு இதுவரையிலும் எந்த அடிப்படை வசதியும் செய்யவில்லை. மேலும் எங்கள் ஊர் மயானத்துக்கு தகர கொட்டகை வேண்டும் என்றும், பேருந்து நிலையத்தில் மகளிர் கழிப்பிடம் அமைக்க வேண்டும் என்றும் கூறியும் இதுவரையில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

1998 ஆம் வருடம் வரை பல வீடுகளுக்கு வரி போடாமலும், புதியதாக நிர்மானிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு உடன் வரி சீராய்வு செய்யாமல், பல வருடங்கள் காலம் தாழ்த்தி வரி நிர்ணயம் செய்து அரசுக்கு பேரிழப்பு உண்டாகிறது. இதன் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*– பொதுமக்கள் சார்பாக ஆர்.விமலா, பெத்தநாயக்கன் பாளையம், சேலம் மாவட்டம்.*

**தீர்வு :**

**பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சியைச் சேர்ந்த 5–வது வார்டு பகுதிக்கு பேரூராட்சி மூலம் கீழ்க்கண்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**



**1996–97 ஆம் ஆண்டு அடிப்படை வசதிகள் திட்டத்தில் சோடியம் விளக்கு ஒன்றும் அமைக்கப்பட்டது. 1997–98 மற்றும் 1998–99 ஆம் ஆண்டு அடிப்படை வசதிகள் திட்டத்தின் கீழ், தெருவிளக்குகள் மூன்றும் அமைக்கப்பட்டுள்ளன.**

**1998–99 ஆம் ஆண்டு பொதுநிதியிலிருந்து தண்டாயுதபானி செட்டியார் சந்து காங்கிரிட் சாலை ரூ.28,000 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டது.**

**மாநில பகிர்வுநிதி ஒதுக்கீட்டில் சிமெண்ட் சாலை நிறுவனம் செய்ய டெண்டர் கோரப்பட்டு வேலை செய்ய உத்திரவிடப்பட்டு ரூ.1,45,000 மதிப்பீட்டில் வேலை நடைபெறுகிறது.**

**5–வது வார்டு பகுதி அக்ரஹாரத் தெரு தார்ச் சாலை அமைக்க வேலை ரூ.1,90,000 மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.**

**தற்பொழுது மெயின் ரோடில் இருந்து 5வது வார்டு கடைத் தெரு வழியாக தொழுவர் தெரு, காளிச்செட்டியூர் வரை தார்சாலை ரூ.5,00,000 செலவில் நெ.கி.ப. துறை மூலம் அமைக்கப்பட்டு ரூ.1,00,000 (5வது வார்டு பகுதிக்கு மட்டும்) செலவிடப்பட்டுள்ளது.**

**பகுதி 2–திட்டத்தில் 5–வது வார்டு கழிப்பிடம் ஒன்று ரூ.36,000 மதிப்பீட்டில் பழுது பார்க்கப்பட்டு உள்ளது.**

**5–வது வார்டு தர்மராஜா மில் தெரு காங்கிரீட் சாலை 10வது நிதிக்குழு திட்டத்தில் ரூ.34,000 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.**

**சிமெண்ட் சாலை ரூ.85,000 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.**

**மேட்டூர் பொது குடிநீர் குழாய்கள் புதியதாக ஐந்து நிறுவனம் செய்யப்பட்டு உள்ளது.**

**பேரூராட்சி பகுதியில் உள்ள மயானத்தில் கொட்டகை அமைப்பதற்கு மன்ற தீர்மானம் இயற்றி மதிப்பீடுகள் கோரப்பட்டுள்ளது. விரைவில் மதிப்பீடுகள் பெற்று வேலை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

**பேருந்து நிலையம் அருகில் அரியூர் பகுதியில் பெண்களுக்காக ரூ.1,35,000 செலவில் கழிப்பிடம் கட்டப்பட்டு உபயோகத்தில் உள்ளது.**

**பேரூராட்சி பகுதியில் உள்ள வீடுகள் அனைத்திற்கும் 1998–அக்டோபர் முதல் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.**

**மேலும், பேரூராட்சியில் 5–வது வார்டு பகுதியில் ஏற்கெனவே கீழ்கண்ட வசதிகள் உள்ளன.**

**தெருவிளக்கு 32ம், பொதுகுடிநீர் குழாய் 8ம், குழாய் கிணறுகள் 2ம், 5–வது வார்டு பகுதிகள் அனைத்திற்கும் சாக்காடை வசதிகள் செய்யப்பட்டு உள்ளது.**

**எனவே பேரூராட்சி 5–வது வார்டு பகுதிக்கு மட்டும் பேரூராட்சி நிதி மற்றும் திட்ட நிதிகள் மூலம் சுமார் 7,00,000 மதிப்பீட்டில் வேலைகள் நடைபெற்று உள்ளது. மேற்படி வார்டுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு உள்ளன என்ற விவரத்தினைப் பணித்து சமர்ப்பித்துக் கொள்கிறேன்.**

*– செயல் அலுவலர், தேர்வுநிலைப் பேரூராட்சி, பெத்தநாயக்கன்பாளையம், சேலம் மாவட்டம்.*

* * *

பிரச்சினை :

நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் வட்டத்தில் கடந்த 50 ஆண்டுகாலமாக சுமார் 60 குடும்பங்கள் வசித்து வருகிறோம். மிகவும் ஏழ்மையான எங்களுக்கு எந்த அடிப்படை வசதியும் இல்லை. தினமும் கூலி வேலை செய்து ஜீவனம் நடத்தி வருகிறோம். கடந்த 87ஆம் ஆண்டு எங்களுக்கு மிகவும் அத்தியாவசிய தேவையான வீட்டுமனை வேண்டி இராசிபுரம் தாசில்தாருக்கு விண்ணப்பித்து இருந்தோம். அந்த மனுவில் எங்கள் கிராமத்தில் உள்ள சர்வே எண்.135/1,161/1, ஆகிய இடங்களில் ஒதுக்கீடு செய்யும்படி கோரியிருந்தோம்.

நாங்கள் எங்களுக்கு வீட்டுமனை வேண்டி பலமுறை மனுக்களை அனுப்பிய போதும் எந்த வகையிலும் பிரோயஜனப்படவில்லை. அதனை அடுத்து நாங்கள் அனைவரும் ஒன்றுகூடி போராட்டம் நடத்துவதென அறிவித்தோம். அதனை அடுத்து எங்களுக்கு நாமகிரிப்பேட்டை கிராமம் ச.எண்.176/2பி2 மற்றும் 176/30.69.0 ஹெக்டேர் நிலம் ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை தொடரப்பட்டது. ஆனால் அந்த நிலத்தின் உரிமையாளர் கருப்பண்ண கவுண்டர் மற்றும் பழனியப்ப கவுண்டர் இருவரும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.18135/91 மற்றும் 18136/91ல் வழக்கு தொடர்ந்தனர். பின்னர் கருப்பண்ண கவுண்டர் இறந்துவிடவே மேற்படியார்கள் வாரிசுகள் டபிள்யு.பி.என்.9910/95ல் ஒரு வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளது. அதன்பேரில் பத்திவாரி அறிக்கை எப்.சி.ஏ. அரசினரால் 2.2.96ல் அனுப்பப்பட்டு வழக்கு நிலுவை உள்ளது. வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேலும் 6 மாத காலம் ஆகும் என அரசு வழக்கறிஞர் 22.9.97ந் தேதிய கடிதத்தில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலருக்கு தெரிவித்துள்ளார். ஆனால் இன்னும் மேற்படி வழக்கில் எந்த முடிவும் காணப்படாமல் நிலுவையிலேயே இருக்கின்றது. நாங்களும் எங்களுக்கு நிலம் ஒதுக்கித் தரும்படி பலமுறை பல அலுவலகங்களின் வாயிலை தட்டிக் கொண்டே இருக்கிறோம்.

நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அனுப்பிவிட்டோம் என்கிறார்கள். நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கேட்டாலும், இது சம்மந்தமான மனுக்கள் அனுப்பினாலும், நேரில் கொடுத்தாலும் இதுவரை எங்களுக்கு எந்தவித பதிலும் இல்லை. எங்களின் அவல நிலையினை நீங்கள்தான் தீர்க்க வேண்டும் என இருகரம் கூப்பி வேண்டுகிறோம்.

*– ஊர் பொதுமக்கள், தண்ணீர்பந்தல்காடு, இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம்.*

தீர்வு :

**இராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த தண்ணீர்பந்தல்காடு என்ற குக்கிராமத்திலுள்ள வீடற்ற 36 அருந்ததியர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க நாமகிரிப்பேட்டை கிராம ச.எண்.176/2பி2 புஞ்சை 0.43.5 ஹெக்டேர் மற்றும் ச.எண்.176/3ஏ புஞ்சை விஸ்தீர்ணம் 0.25.5 ஹெக்டேர் என்ற இரு நிலங்களை நில ஆர்ஜித சட்டம் 1894ன் கீழ் ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு இவ்வலுவலக எண் 6/91–92 நாள் 26.12.91ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நிலச் சொந்தக்காரர்கள் நஷ்ட ஈட்டுத்தொகையை வாங்க மறுத்துவிட்டபடியால் மேற்படி நஷ்ட ஈட்டுத் தொகையை நாமக்கல் சப் கோர்ட்டில் பிரிவு 30,31(2)ன் டிபாசிட் செய்யப்பட்டுவிட்டது. நில சொந்தக்காரர்கள் பழனியப்பகவுண்டர் மற்றும் திரு.கருப்பண்ணக்கவுண்டர் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை மனு எண்.18136/91 ல் மேற்படி நில ஆர்ஜிதத்தை ஆட்சேபணை செய்து வழக்கு தொடர்ந்து அதில் டபிள்யூ.எம்.ப்பி 27182/91ன்படி சுவாதீனம் எடுக்க தடையாணை பெற்றிருந்தார். மேற்படி வழக்கும் தள்ளுபடியாகி தனியார் பேச்சுவார்த்தை மூலம் நில ஆர்ஜிதம் செய்யுமாறு 27.10.94ல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. திரு.கருப்பண்ண கவுண்டர் 22.6.94ல் இறந்த பிறகு அவரது வாரிசுகளான கே.துரைசாமி மற்றும் கே.சரஸ்வதி ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மீண்டும் நீதிப் பேராணை மனு எண் 9910/95ல் இந்த நில ஆர்ஜிதத்தை ஆட்சேபணை செய்து டபிள்யு.எம்.ப்பி15721/95 நாள் 27.7.95ல் நிலத்தை சுவதீனம் எடுக்கத் தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்திரவு பிறப்பித்து வழக்கு விசாரணை இன்னும் முடிவடையாமல் நிலுவையில் உள்ளது. இவ்வழக்கில் அரசுக்கு சாதகமான தீர்ப்பு பெறப்பட்ட பின்புதான் அருந்ததியர்களுக்கு வீட்டுமனை வழங்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

*– தனித்தாசில்தார் (ஆதிந), நாமக்கல்.*

★ ★ ★

பிரச்சினை :

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் ஒன்றியம் பனையப்பட்டி ஊராட்சியில், திரு.ப.சிதம்பரம் ஆணையின் பெயரில் மாவட்ட ஆட்சித்தலைவர் நிதியிலிருந்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டப்பட்டுள்ளது. 1997–98ஆம் ஆண்டு கட்டப்பட்டது இந்த தொட்டி. கட்டி சுமார் 18 மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. மாவட்ட கவுன்சிலர் (10வது வார்ட்) செல்வி சண்முகவள்ளி அவர்களின் நிதியிலிருந்து ரூ.20,000க்கு ஒரு மோட்டார் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை மோட்டார் பொருத்தப்படவில்லை. தொட்டி மட்டும் கட்டப்பட்டு எந்தவித பயனும் இன்றி உள்ளது. தற்போது கட்டப்பட்டுள்ள ஆழ்குழாய் நல்ல தண்ணீராகவும் போதிய அளவில் கிடைக்கும் வகையிலும் உள்ளது. அதனால், பொது மக்களுக்குப் பயன்பெறும் வகையில் மோட்டார் பொருத்தி சப்லைன் போட்டு பொது மக்களுக்குப் பயன்பெறும் வகையில் "தீர்வு" கண்டு தருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

*–வி.ஆர்.எம்.இராமச்சந்திரன், பொது மக்கள் சார்பாக ஊராட்சி மன்றத்தலைவர் மற்றும் மக்கள் நலப்பணியாளர், புதுக்கோட்டை.*

தீர்வு :

**திருமயம் ஊராட்சி ஒன்றியம் பனையப்பட்டி ஊராட்சியில் சந்தைப்பேட்டை அருகில் உள்ள 10,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இம்மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தேவையான விசையிறைப்பான் திருமயம் ஊராட்சி ஒன்றியம் மூலம் பனைப்பட்டி ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது. இதனைப் பொருத்தி மேலும் தேவைப்படும் குடிநீர் பகிர்மானம் குழாய்களை பதித்து, திட்டத்தை செயல்படுத்த தேவையான நிதி, தொடர்புடைய ஊராட்சியில் இல்லாத காரணத்தால் இத்திட்டத்தின் 1998–99ஆம் ஆண்டின் கிராம வேலைத் திட்டத்தின் கீழ், ரூ.40,000 மதிப்பீட்டில் செயல்படுத்த தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் முடிக்கப்பட்டு மக்களின் பயனுக்கு கொண்டு வரப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

*மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை.*

★ ★ ★

பிரச்சினை :

சிவகங்கை மாவட்டம், சேத்தூர் கன்மாய் (பொ.ப.து) பாசனத்திலுள்ள 3வது மடை தூர்ந்து விட்டது. இதனால் பல ஆண்டுகளாக மூலக்கரை கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் விவசாயம் செய்தும் கண்மாயில் தண்ணீர் இருந்தும் பாசனமடை இல்லாததால், பயிர் பட்டுப் போகிறது. இதனால் பல விவசாயக் குடும்பங்கள் வறுமை நிலையை அடைந்துள்ளனர். இந்த 3வது மடையைக் கட்டித்தர பொதுப்பணித்துறை பொறியாளர்களிடம் பலமுறை கோரிக்கை வைத்தும், மாவட்ட ஆட்சியரிடம் தெரிவித்தும், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி அமைச்சரிடம் கோரிக்கை மனு கொடுத்தும் அதிகாரிகளின் அலட்சியப் போக்கால் மடை கட்ட முடியவில்லை.

எனவே, சிவகங்கை மாவட்ட பொதுப்பணித்துறை மூலம் சேத்தூர்–கண்மாயில் 3வது மடை கட்டித்தந்து விவசாயிகளின் வாட்டத்தைப் போக்கிட ஆவண செய்து தர கிராம மக்களின் சார்பாக வேண்டுகிறேன்.

*– மூலக்கரை கிராமப்பொதுமக்கள் சார்பாக, ச.ப.முருகேசன், சேத்தூர் கிராமம், காளையார் கோயில் ஒன்றியம், சிவகங்கை மாவட்டம்.*

தீர்வு :

**காளையர்கோயில் ஒன்றியம் சேத்தூர் கிராமம் சேத்தூர் கண்மாய்–பொதுப்பணித்துறை பரா**

**மரிப்பிலுள்ள 161.10 ஏக்கர் பாசனப் பரப்புள்ள கண்மாயாகும். இக்கண்மாயில் மொத்தம் நான்கு மடைகள் உள்ளன.**

**மூலக்கரை கிராமப் பொதுமக்கள், இரண்டாவது மடைக்கும், மூன்றாவது மடைக்குமிடையில் புதிதாக ஒரு மடை கட்டித் தரக் கோரியதன் பேரில் 1993–94ஆம் ஆண்டில் மதிப்பீடு தயாரித்து மாவட்ட ஆட்சியர் ஒப்புதல்பெற்று ஒப்பந்தக்காரர் நிர்ணயம் செய்து வேலையைத் தொடங்கும் நிலையில் சேத்தூர் கிராமத்தின் பொதுமக்கள் புதிய மடை கட்டக்கூடாது என்று கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு எண்.301/94 நடைபெற்றதால் புதியமடை கட்டுமானப் பணி செய்யவில்லை. வழக்கு என்.301/94இன் முடிவில் வாதிக்கு பாதிப்பு இல்லாத வகையில் பிரதிவாதிகள் மடைக்கட்டி கொடுக்கலாம் என்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பணியைச் செய்ய நடவடிக்கை எடுக்கும் தருணத்தில் சேத்தூர் கிராம மக்கள் சேத்தூர் கண்மாயில் புதிய மடை கட்டுவதற்கு நேரில் வந்து மீண்டும் எதிர்ப்பு தெரிவித்துள்ளதால் இப்பணியைச் செய்ய தடைப்பட்டுள்ளது என்பதையும் தெரிவிக்கப் படுகிறது. மேலும் சேத்தூர் மக்கள் மற்றும் மூலக்கரை கிராம மக்கள் இவர்களிடையே ஏற்பட்டுள்ள மன ஒற்றுமை இன்மையே பணிமேற்கொள்வதற்கு தடையாக உள்ளது இதில் அதிகாரிகளின் அலட்சியப் போக்கு என்பது சரியாகாது என தெரிவிக்கப்படுகிறது.**

*– செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை, நீர்வள ஆதாரம், சருகனியாறு வடிநிலக்கோட்டம், சிவகங்கை.*

★ ★ ★

**பிரச்சினை :**

எட்டிமங்கலம்சேகரம், சுந்தராஜபுரத்தில் மொத்த மின் கம்பங்கள் 15. அதில் 13ல் மின் விளக்கு உள்ளது. அதில் தற்பொழுது 4 மின்விளக்குகள் தான் எரிகிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை. விளக்குகளும் எரியவில்லை. தக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் இங்குள்ள கைப்பம்பு பழுதடைந்து இரண்டு மாதங்கள் ஆகியும் இன்னமும் பழுது நீக்கப்படவில்லை. தண்ணீர் கஷ்டமான இந்நேரத்தில் விரைவில் பழுது பார்த்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*– பொதுமக்கள் சார்பில், கே.சௌந்தரபாண்டியன் எட்டிமங்கலம், சுந்தராஜபுரம், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.*

**தீர்வு :**

**மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், எட்டிமங்கலம் ஊராட்சியில் உள்ள 13 தெருவிளக்குகளுக்கு 5/99ல் மின் உபகரணங்கள் வாங்கி பொருத்தப்பட்டு நல்லமுறையில் எரிந்து வருவதாகவும் இங்குள்ள 3 ஆழ்குழாய்களும் தற்சமயம் நல்ல நிலையில் இயங்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார். இவை எந்தவித குறைபாடுமின்றி இயங்கி வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

*வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ) கொட்டாம்பட்டி, மதுரை மாவட்டம்.*

★ ★ ★

**பிரச்சினை :**

எங்கள் ஊரில் சுமார் 500 குடும்பங்கள் வசித்து வருகிறோம். எங்கள் ஊர் மிகவும் பழமை வாய்ந்தது. மேலும், எங்கள் ஊரில் ஓர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது (மூன்று மாதங்கள்) கிராம மக்கள் குடிநீர் இன்றி தவித்து வருகிறோம்.


குடிநீருக்கான மோட்டார் பழுதடைந்து மூன்று மாதங்களுக்கு மேலாகியும் பழுது பார்க்கப்படவில்லை. குடிநீருக்காக பொதுமக்கள் சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரம் வரை சென்று தண்ணீர் எடுத்துவர அவதிபடுகின்றனர்.

ஆகவே, இப்பிரச்சனை தொடர்பாக நிரந்தர தீர்வு காண வேண்டுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

*– ஊர்பொதுமக்கள் மற்றும் வார்டு மெம்பர், மோட்டாங்குறிச்சி கிராமம்.,*

**தீர்வு :**

**மோட்டாங்குறிச்சி கிராமத்தில் தற்பொழுது கைப்பம்புகள் எதுவும் பழுதில்லை என்றும், குடிநீர்**



**தட்டுப்பாடு எதுவும் இல்லை என்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார். மேலும் நலிவடைந்த ஊராட்சிக்கு புதிய கைப்பம்புகள் அமைக்க மோட்டாங்குறிச்சி மற்றும் நத்தமேடு கிராமத்திற்கு முன்மொழிவுகள் அனுப்பப் பட்டுள்ளது.**

**மேலும் 1997–98ஆம் ஆண்டு மாநில நிதிக்குழு திட்டத்தின் கீழ் மோட்டாங்குறிச்சி மேல்நிலைத் தொட்டிக்கு புதியதாக ஒரு மின் மோட்டார் (5 குதிரை திறன் கொண்டது) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், மொரப்பூர் அவர்கள் தெரிவித்துள்ளார் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

*– ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர், தருமபுரி.* ★

# இன்டர்நெட் ஓர் அறிமுகம்

காலத்திற்கு காலம் அந்தக் காலத்திற்கேற்ற புதிய சமூக பந்தங்கள் மனிதர்களை இணைத்து வைத்திருக்கின்றன. தகவல் தாகம் கொண்ட இந்த நவீன எலெக்ட்ரானிக் யுகத்தில் இந்தக் காலத்திற்கேற்ற புதிய சமூக பந்தமாக இன்டர்நெட் உருவாகி வருகிறது.

இன்டர்நெட் இன்று உலகம் முழுவதிலும் பல கோடி மனிதர்களுக்கிடையில் நெருக்கமான (அன்னியோன் யமான என்று கூட கூறலாம்) தொடர்பை ஏற்படுத்தி வருகிறது. அவர்கள் புதிய தகவல்களை பெறவும், பிறருக்கு தகவல் அல்லது செய்திகளை அனுப்பவும், கருத்து தெரிவிக்கவும், வாங்கவும் விற்கவும், இன்னும் கற்பனை செய்யக்கூடிய அனைத்து மனித நடவடிக்கைகளுக்கும் இன்டர்நெட் வசதிகளை வழங்குகிறது.

இந்த இன்டர்நெட் என்பது என்ன? இது எலெக்ட்ரானிக் யுகம் என்று நாம் பொதுவாக குறிப்பிட்டுள்ளபோதிலும் இந்த காலத்தை சிறப்பாக கம்ப்யூட்டர்யுகம் என்று அழைக்கலாம். இன்று மனித வாழ்க்கையில் கம்ப்யூட்டர் பயன்படுத்தப்படாத துறையே இல்லை என்னும் அளவிற்கு மனித வாழ்க்கையே கம்ப்யூட்டர் ஆக்ரமித்து வருகிறது.

கம்ப்யூட்டர் என்பது தகவல்களை வகைசெய்வதற்கான ஒரு எலெக்ட்ரானிக் சாதனம். கம்ப்யூட்டர் அதற்கு நாம் வழங்கும் தகவல்களை பகுத்தும், தொகுத்தும், சேமித்தும், திரும்ப கொண்டுவந்தும், அந்த தகவல்களின் அடிப்படையில் முடிவுகள் எடுத்தும் அல்லது புதிய தகவல்களை உருவாக்கியும் தகவல்களை வகைசெய்வதிலும், உபயோகமான முறையில் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் நிர்வகிப்பதிலும் மனிதருக்கு பலவாறு உதவிவருகிறது.

கம்ப்யூட்டரின் இந்தப்பயன் ஒரு புதிய உத்தியில் பயன்படுத்திக் கொள்ளப்படுவதே இன்டர்நெட் எனப்படுகிறது. எடுத்துக்காட்டாக, அறிவுத்தாகம் கொண்ட சில மனிதர்கள் தங்களுடைய சொந்த அனுபவங்களை தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளவும், புதிய அறிவை தேடிப் பெறவும் தங்களுக்குள் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர் என்று வைத்துக் கொள்வோம்.


இதுபோன்ற நிலையில் ஒருவர் தமக்கு தேவைப்படும் தகவல்களை அந்தக் குழுவிலுள்ள மற்றவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளவும் அதே போல தாம் அறியவந்த புதிய தகவல்களை அந்தக் குழுவிலுள்ள மற்றவர்களுக்கு தெரிவிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

இன்டர்நெட்டும் இதைப் போன்றதுதான். மற்றவர்களிடமிருந்து புதிய தகவல்களை தெரிந்து கொள்ள விரும்புபவர்களும், மற்றவர்களுக்கு தெரிவிப்பதற்கான புதிய தகவல்களை வைத்திருப்பவர்களும் கம்ப்யூட்டர்கள் மூலம் தங்களுக்குள் ஒரு இணைப்பை ஏற்படுத்திக் கொள்வதை ஒரு இணையம் (network) என்று அழைப்பதாக வைத்துக் கொள்வோம். இதுபோன்ற பல கம்ப்யூட்டர் இணையங்களின் (Computer Networks) இணைப்பே இன்டர்நெட் எனப்படுகிறது.

இன்டர்நெட் என்பது முதலில் அமெரிக்காவில் தான் ஆரம்பமானது என்ற போதிலும் அது எந்த ஒரு நாட்டுக்கும், அல்லது நிறுவனத்துக்கும் அல்லது தனிமனிதருக்கும் சொந்தமானதல்ல.

**- வே. தமையந்திரன்**

இன்டர்நெட் அதில் அங்கத்தினர்களாக இருப்பவர்கள் அனைவருக்கும் பொதுவானது. அதாவது இதை ஒரு வீட்டுவசதி சங்கத்திற்கு ஒப்பிடலாம்.



பலர் ஒரு வீட்டுவசதி சங்கத்தை உருவாக்கி ஒரு பலமாடி கட்டடத்தை கட்டுகின்றனர் என்று வைத்துக் கொள்வோம். அதிலுள்ள ஒவ்வொரு வீடும் ஒரு உறுப்பினருக்கு சொந்தமானதாக இருக்கும்; அவர்கள் ஒரு பொதுவான ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்த பலமாடிக் கட்டடத்தின் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, அங்காடி, பள்ளிக்கூடம், பொழுதுபோக்கு பூங்கா போன்ற வசதிகளை தங்களுக்குள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

கிட்டத்தட்ட இதைப் போன்றது தான் இன்டர்நெட் என்பதும், ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட பொதுவான கம்ப்யூட்டர்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தகவல்கள், படங்கள் ஆகியவற்றை அந்த பொதுவான கம்ப்யூட்டர்களுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய அங்கீகாரம் பெற்றவர்கள் பயன்படுத்திக் கொள்வதே இன்டர்நெட் எனப்படுகிறது.

இந்த பொதுவான கம்ப்யூட்டர்கள் இன்டர்நெட் சேர்வர்கள் (Internet Servers) என்று அழைக்கப்படுகின்றன. இதுபோன்ற இன்டர்நெட் சேர்வர்கள் அல்லாத வேறு சேர்வர் கம்ப்யூட்டர்களும் இன்டர்நெட்டில் இணைக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற சேர்வர் கம்ப்யூட்டர்கள் அல்லது ஹோஸ்டர்கள் (Hosts) இன்டர்நெட் உபயோகிப்பாளர்களுக்கு (இன்டர் நாட்கள் = Internauts) பலவித சேவைகளை வழங்குகின்றன.

உலகம் முழுவதிலும் உள்ள இதுபோன்ற பல இலட்சம் கம்ப்யூட்டர்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன. இன்டர் நாட்கள் தங்களுடைய பெர்சனல் கம்ப்யூட்டர்களின் உதவியுடன் இந்த சேர்வர் கம்ப்யூட்டர்களுடன் இணைப்பை ஏற்படுத்தி தங்களுக்கு தேவையான தகவல்களை பெறவோ அல்லது வேறு நடவடிக்கைகளில் ஈடுபடவோ முடியும். எடுத்துக்காட்டாக, ஒரு புத்தக வியாபாரி ஒரு சேர்வர் கம்ப்யூட்டரில் கொஞ்சம் இடம் வாங்கி அதில் தம்முடைய புத்தகங்கள் பற்றிய அனைத்து விவரங்களையும் சேமித்து வைக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த இடத்திற்கு ஒரு பிரத்தியேக முகவரி வழங்கப்படும்.

புத்தகம் வாங்க விரும்பும் மற்றொரு இன்டர்நெட் அந்த முகவரியின் உதவியுடன் அந்த இடத்தை தொடர்பு கொண்டு அதிலுள்ள விவரங்களை தம்முடைய பெர்சனல் கம்ப்யூட்டருக்கு கொண்டு வந்து தெரிந்து கொள்ளலாம்.

உலகம் முழுவதிலும் 96 நாடுகளில் உள்ள 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கம்ப்யூட்டர் இணையங்கள் (Net works) இன்டர்நெட்டின் மூலம் இன்று இணைக்கப்பட்டிருப்பதாக இன்டர்நெட் சங்கம் கூறுகிறது.

இன்டர்நெட்டில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாட்டிலும் குறைந்தது ஒரு முக்கிய கம்ப்யூட்டர் இணையம் இருக்கும். மற்ற சிறிய கம்ப்யூட்டர் இணையங்கள் அந்த முக்கிய இணையத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்.

இதுபோல உலக அளவில் இணைக்கப்பட்ட கம்ப்யூட்டர்களின் அமைப்பான இன்டர்நெட்டில்

ஒரு காலத்தில் அரசுகளும், பல்கலைக்கழகங்களும், ஆராய்ச்சி நிறுவனங்களும் மட்டுமே அங்கம் வகிக்க அனுமதிக்கப்பட்டன. ஆனால், இப்போது ஆர்வமும், அவகாசமும், வசதியும் உள்ள யார் வேண்டுமானாலும் இன்டர்நெட்டை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்டர்நெட்டில் வெளியிடப்படும் தகவல்களும், அதை பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளும் இன்று அதிசயிக்கத்தக்க அளவில் மிக வேகமாக அதிகரித்து வருகின்றன. அதிலும் கடந்த ஆறு ஆண்டுகளில் தான் இன்டர்நெட்டின் செயல்பாடு என்றுமில்லாத அளவில் அதிகரித்துள்ளது.

இன்டர்நெட் சங்கத்தின் கணக்குப்படி 1990ல் சுமார் 5 இலட்சம் செர்வர் கம்ப்யூட்டர்கள் அல்லது ஹோஸ்டர்கள் தான் இன்டர்நெட்டில் இணைக்கப்பட்டிருந்தன. ஆனால் 1995ன் மத்தியில் இந்த எண்ணிக்கை 48 இலட்சமாக உயர்ந்தது.

இன்டர்நெட்டை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதைவிட அதிசயமானது. உலகம் முழுவதிலும் இன்று 5 கோடிக்கும் மேற்பட்டவர்கள் இன்டர்நெட்டை பயன்படுத்துகின்றனர். இந்த எண்ணிக்கை 2000 ஆண்டு வாக்கில் 20 கோடியாக அதிகரித்து விடும் என்று மதிப்பிடப்படுகிறது.

இதுபோல இன்டர்நெட்டை பயன்படுத்துபவர்களில் தொழில் நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும், அரசு நிறுவனங்களும் தான் அதிகம். ஆனால், இப்போது தனிப்பட்ட மனிதர்கள் வீட்டிலிருந்தபடியே இன்டர்நெட் இணைப்பு பெறுவதும் வேகமாக அதிகரித்து வருகிறது.

உலகின் மிகப் பெரிய கம்ப்யூட்டர் இணையமான இன்டர்நெட் மற்ற சேவை நிறுவனங்களைப் போலவே இன்று வேகமாக வர்த்தகமயமாக்கப்பட்டு வருகிறது. ஆரம்ப காலத்தில் பல்கலைக்கழகங்களினால் கல்வி மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்காகவே அதிகமாக பயன்படுத்தப்பட்டு வந்த இன்டர்நெட்டில் இன்று வர்த்தக நோக்கங்களுக்காக அதை பயன்படுத்திக் கொள்ள பல கம்பெனிகளின் கம்ப்யூட்டர்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல இன்டர்நெட் இணைப்பு பெற்றுத்தரும் நிறுவனங்களை (Service Providers) பொருத்தவரையிலும் அடிப்படையான மாறுதல் ஏற்பட்டுவருகிறது. அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்கள் மட்டுமே இதுவரை இன்டர்நெட் இணைப்புகளை பெற்றுத் தருவதில் ஈடுபட்டிருந்தன. இப்போது தனியார் நிறுவனங்களும் அந்தப் பணியில் ஈடுபட தொடங்கியுள்ளன.

இந்தியாவின் சர்வதேச தொலைத் தொடர்பு நிறுவனமான விதேஷ் சஞ்சார் நிகம் லிமிடெட் (Videsh Sanchar Nigam Limited) நிறுவனம் இந்தியாவில் இன்டர்நெட் இணைப்புகளை பெற்றுத் தருகிறது. இந்த நிறுவனம், இந்தியாவில் ஏற்படுத்தியுள்ள இன்டர்நெட் இணையம், வி.எஸ்.என்.எல். (VSNL) லின் கேட்வே இன்டர்நெட் அக்செஸ் செர்வீசஸ் (GIAS) இணையம் எனப்படுகிறது.

இந்தியாவில் தனியார் நிறுவனங்களும் இன்டர்நெட் இணைப்புகளை பெற்றுத் தரும் பணியில் ஈடுபடுவதை அனுமதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

**தொலைவிலிருந்து தகவல் பெறுதல் (Remote Acces):**

தொலைவிலிருந்து தகவல் பெறுதல் (Remote Acces) தொலைவிலிருந்து கட்டுப்படுத்துதல் (Remote Control) ஆகிய தொழில்நுட்பங்கள் தகவல் தொழில்நுட்பத்தில் இன்று பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. பூமிக் கோளத்தின் வெவ்வேறு முனைகளில் உள்ள இருவர் தங்களுக்குள் மிக எளிதாக தகவல்களை பரிமாறிக் கொள்ளவும் அல்லது ஒருவர் மிகத் தொலைவில் உள்ள ஒரு ஆதாரத்திலிருந்து தனக்கு தேவைப்படும் தகவல்களை பெற்றுக் கொள்ளவும் இப்போது வசதி ஏற்பட்டுள்ளது.

தொலைவிலிருந்து தகவல் பெறும் வசதியை பெற தொலைபேசி சேவை (Plain Old Telephone Service = POTS) இன்டகிரேட்டட் சர்வீசஸ் டிஜிட்டல் நெட்ஓர்க் (Intergrated Services Digital Network ISDN) லைன்கள் மற்றும் லீஸ்ட் லைன்கள் ஆகியவை உதவுகின்றன. தொழில் நிறுவனங்களின் தலைமை அலுவலக கம்ப்யூட்டர்கள், புல்லெட்டின் போர்டு சேவைகள், இன்டர்நெட் அல்லது

இன்ட்ராநெட் ஆகிய பல்வேறு ஆதாரங்களுடன் இணைப்பை ஏற்படுத்த இவை உதவுகின்றன.

தகவல்கள் பெறுவதற்கு இன்டர்நெட் தவிர வேறு பல கம்ப்யூட்டர் இணையங்களும் உள்ளன. ஆனால், அதுபோன்ற கம்ப்யூட்டர் இணையங்களில் இன்டர்நெட்டில் உள்ள அளவிற்கு வசதிகள் இல்லாததால் ஒன்று அவை இன்டர்நெட்டுடன் இணைக்கப்படுகின்றன அல்லது அருகி வருகின்றன.

**இன்டர்நெட்டின் பயன்கள்**

இன்டர்நெட்டை வீட்டில் பொழுதுபோக்கிற்கும், கல்விக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். அதேபோல, வர்த்தக ரீதியாகவும் அது மிகவும் பயனுடையது.

வீட்டில் இன்டர்நெட் இணைப்பு பெற்றால் பின்வரும் உபயோகங்களுக்கு அதை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

நண்பர்களுடன் அல்லது வெகுதொலைவில் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் போன்ற குடும்ப உறுப்பினர்களுடன் எலெக்ட்ரானிக் மெயிலில் (இ—மெயில்) உடனுக்குடன் செய்திகளை பரிமாறிக் கொள்ள முடியும்.

பொது செய்திக் குழுக்கள் அல்லது புல்லெட்டின் போர்ட்டுகள் போன்ற வசதிகள் மூலம் உங்களுக்கு ஆர்வமுள்ள தலைப்பிலான குழு விவாதங்களில் கலந்து கொள்ளலாம்.

கல்வி வாய்ப்புகளை கண்டறியலாம். உலகம் முழுவதிலும் உள்ள பல்கலைகழகங்களும், புத்தகக் கடைகளும், நூலகங்களும், பிரத்தியேக பள்ளிகளும் இன்டர்நெட்டில் நேரடியாக தகவல்களை பகிர்ந்து கொள்கின்றன.

பொழுது போக்கிற்கு இன்டர்நெட் மிகச் சிறந்த சாதனம். சிக்கனமானதும்கூட. உலக விஷயங்கள் அனைத்தும் இன்டர்நெட்டில் இடம் பெற்றுள்ளன. அவற்றை வேடிக்கை பார்ப்பதே நல்ல பொழுது போக்குதான்.

பொருட்கள் வாங்க— இன்டர்நெட் மூலம் வியாபாரம் செய்யும் வர்த்தக நிறுவனங்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. பூக்களுக்கும், இசை சாதனங்களுக்கும், கம்ப்யூட்டர் கருவிகளுக்கும் இன்டர்நெட் மூலமாகவே ஆர்டர் கொடுக்கலாம். முடிவெட்டிக் கொள்வதற்குக் கூட இன்டர்நெட்டில் ஆலோசனை பெறலாம். எந்தப் பொருள் வாங்குவதற்கும் இன்டர்நெட்டில் ஆலோசனை பெறலாம்.

**வர்த்தக நிறுவனங்களுக்கு**

வர்த்தக ரீதியாகவும் இன்டர்நெட் அளப்பரிய பயனுடையது. வர்த்தக நிறுவனங்களில் இன்டர்நெட்டை கீழ்க்காணும் வழிகளில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஒரு தொழில் நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் உற்பத்தி பொருட்களுக்கான தொழில்நுட்ப உதவியை இன்டர்நெட் மூலம் பெறலாம்.

**சாப்ட்வேரை விநியோகிக்க இன்டர்நெட் உதவும்**

வாடிக்கையாளருக்கு தொழில்நுட்ப உதவி வழங்கவும், உற்பத்தி பொருட்களைப் பற்றிய தகவல்களை வழங்கவும் இன்டர்நெட் உதவும்.

தொழில்நுட்ப தகவல்கள் அல்லது விற்பனை பற்றிய தகவல்கள் போன்றவற்றை வெளியிடலாம்.

தொழில் ரீதியான தகவல் தொடர்பிற்கு அல்லது தொழில் திட்டங்களில் இணைந்து செயல்பட இன்டர்நெட் உதவும்.

உற்பத்தி பொருட்களை சந்தைக்கு கொண்டு வரவும் விற்பனை செய்யவும் இன்டர்நெட் உதவும்.

நீங்கள் அலுவலகத்துக்கு வெளியில் இருக்கும்போது உங்கள் தொழிலை கவனிக்க இன்டர்நெட் உதவும்.

ஒரு பொருளை கால அவகாசத்துடன் உலக அளவில் விளம்பரப் படுத்துவதற்கு இன்டர்நெட்டைப் போன்ற மலிவான சாதனம் வேறு எதுவுமில்லை.

இன்டர்நெட் ஒரு எலெக்ட்ரானிக் சாதனம் என்பதால் அதில் தகவல்களை உடனுக்குடன் மிக எளிதாக புதுப்பித்துக் கொள்ள முடியும். பத்திரிகைகள் போன்ற அச்சடித்த சாதனங்களில் அது முற்றிலும் முடியாது.

இன்டர்நெட்டில் வெளியிடப்பட்ட தகவல்களில் திருத்தம் செய்வது எளிது. தகவல்களை உடனுக்குடன் புதுப்பிப்பதும் எளிது. அதோடு, உடனுக்குடன் தகவல்களை பெறவும் முடியும்.

**இன்ட்ராநெட் (Intranet)**

இன்டர்நெட் ஒன்றுதான் உலகிலுள்ள ஒரே

இணைக்கப்பட்ட கம்ப்யூட்டர் குழு அல்ல. இன்டர்நெட்டை போலவே தகவல் பரிமாற்றத்திற்காக வேறுபல இணைக்கப்பட்ட கம்ப்யூட்டர் குழுக்களும் (Networks) இருக்கின்றன. பப்ளிக் நியூஸ் குரூப்கள் (Public News Groups) புல்லெட்டின் போர்டு சேவைகள் (Bulletin Board Services) போன்றவற்றை அதுபோன்ற இணைக்கப்பட்ட கம்ப்யூட்டர் குழுக்களுக்கு எடுத்துக்காட்டுகளாக கூறலாம்.

உலகிலேயே மிகப்பெரிய கம்ப்யூட்டர் இணையம் (net-work) என்பதுதான் இன்டர்நெட்டின் சிறப்பு. அதோடு இன்டர்நெட்டில் கிடைக்கும் பல வசதிகளும், சேவைகளும் மற்ற கம்ப்யூட்டர் இணையங்களில் நிச்சயமாக கிடைக்காது.

மற்ற சிறிய கம்ப்யூட்டர் இணையங்கள் இன்டர்நெட்டுடன் இணைக்கப்பட்டுள்ளன. சில தனித்தும் செயல்படுகின்றன. இதுபோன்ற சிறிய கம்ப்யூட்டர் இணையங்களில் சில ஏதாவது ஒரு பிரச்சினையில் பொதுக் கருத்தை அறிய உதவுகின்றன. வேறு சில ஒரு குறிப்பிட்ட துறையில் சிறப்புத் தகவல்களை (Specilised in formation) அந்த தகவல்கள் தேவைப்படுபவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றன.


ஒரு நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளில் உள்ள கம்ப்யூட்டர்களும் இணைக்கப்பட்டு வட்டார கம்ப்யூட்டர் இணையங்களும் ஏற்படுத்தப்படுகின்றன. இதுபோன்ற வட்டார கம்ப்யூட்டர் இணையங்கள் தான் இன்ட்ராநெட் என்று அழைக்கப்படுகின்றன. இந்த இன்ட்ராநெட்கள் இன்டர்நெட்டுடன் இணைக்கப்பட்டும் அல்லது இணைக்கப்படாமல் தனித்தும் செயல்படுகின்றன.

இன்று உலகின் முன்னணி சாப்ட்வேர் நிறுவனமான மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் தலைவர் பில் கேட்ஸ் இன்ட்ராநெட் பற்றி கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

"கடந்த காலத்தில் கம்பெனிகள் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகவே நிர்வகிக்கப்பட்டன. நிறுவனங்களை நடத்துவதற்கு கூட்டங்களையும் மெமோக்களையும் நிர்வாகிகளையும் மட்டுமே அதிகமாக நம்பியிருக்க வேண்டியதிருந்தது.

ஆனால், இன்று நிறுவனங்களின் நரம்பு மண்டலம் மிகவேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. இந்த நரம்பு மண்டலம் டிஜிட்டலாக்கப்பட்டு (Digital) எலெக்ட்ரானிக் சமிக்ஞைகள் மிகவும் சுதந்திரமாக பாய்கின்றன. இதற்கு இன்டர்நெட்டும், நிறுவனத்தின் இன்ட்ராநெட்களும் மிகவும் அவசியமானவையாக இருக்கின்றன.

உங்கள் நிறுவனம் ஒரு வாடிக்கையாளரை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது உங்களுடைய கவனத்திற்கு வருகிறது. அந்த வாடிக்கையாளரை தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால், அவருடைய பிரச்சினைகள் அனைத்தையும் அறிந்த உங்கள் நிறுவன ஊழியர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆலோசித்து உடனடியாக முடிவு எடுத்தாக வேண்டும். உங்கள் நிறுவன ஊழியர்களுக்கு இன்டர்நெட் அல்லது இன்ட்ராநெட் இணைப்பு இருந்தால் தான் இது சாத்தியமாகும்."



இன்ட்ராநெட் பற்றி பில்கேட்ஸ் இவ்வாறு கூறியுள்ளார். பில்கேட்சின் மைக்ரோ சாப்ட் நிறுவனத்தில் ஊழியர்களுக்கு இந்த வசதி வழங்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

***நன்றி :***
***இன்டர்நெட் (ஒரு நவீன பந்தம்)***

# மாஞ்சோலை உள்ளிட்ட தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினையில் அரசின் அணுகுமுறை

★ மாஞ்சோலை எஸ்டேட்டில் கொத்தடிமைகள் இல்லை என தேசிய மனித உரிமைகள் கமிஷன் உயர் அதிகாரி திரு. கார்த்திகேயன் அறிவித்துள்ளார்.

★ இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு அதிக அளவு ஊதியம் வழங்கப்படுகிறது.

| தமிழ்நாடு | கேரளா | கர்நாடகம் | அஸ்ஸாம் | மேற்கு வங்காளம் |
|---|---|---|---|---|
| ரூ.63.88 | ரூ.62.33 | ரூ.56.25 | ரூ.31.60 | ரூ.34.80 |

★ இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் 98 சதவீத மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டில் உள்ள மலைத்தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளைப் பாதுகாக்க 328 காப்பகங்களும், கல்வி வசதிக்காக 88 பள்ளிகளும், தொழிலாளர்களுக்காக 104 கேன்டீன்களும் மற்றும் மருத்துவ வசதிக்காக 129 மருந்தகங்களும், 214 மருத்துவமனைகளும் செயல்பட்டு வருகின்றன.

★ நீண்டகாலமாகத் தற்காலிகத் தொழிலாளர்களாகப் பணியாற்றிய சுமார் 1000–க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தற்பொழுதுதான் நிரந்தரமாக்கப் பட்டுள்ளார்கள்.

★ தோட்டத் தொழிலாளர்கள் நலனுக்காக தேனி, கோத்தகிரி, பந்தலூர் ஆகிய இடங்களில் தோட்ட நிறுவன ஆய்வர் அலுவலகம் திறக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து விவாதித்து, தீர்வு காண அரசு அலுவலர்கள், நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய இரண்டு முத்தரப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

★ தனியாருக்குச் சொந்தமான மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினைகள் குறித்து முறைப்படி சட்டரீதியாக புதிய தமிழகம் தொழிற்சங்கம் எந்த தொழில் தாவாவும் எழுப்பாத நிலையிலும்கூட, தொழிலாளர் நலன் கருதி தமிழக அரசு 13 முறை சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளது. இவைகளன்னியில் தொழிலாளர்துறை அமைச்சர் முன்னிலையில் மூன்று முறை பேசப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தையின் பொழுது புதிய தமிழகமும் மற்ற தொழிற்சங்கங்களும் வைத்த கோரிக்கைகளில் அரை நாள் சம்பளம் பிடித்தம் செய்யக்கூடாது, முழுநேர சம்பளம் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையைத் தவிர மற்ற எல்லா கோரிக்கைகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது.

★ அரசின் முயற்சியால் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு மீண்டும் வேலைக்குத் திரும்பிய தொழிலாளர்களுக்கு ரூ.2000 முன்பணமாக வழங்கப்பட்டு, இதனை மாதம் ரூ.400 வீதம் பிடித்தம் செய்யப்படும் என்ற நிர்வாகத்தின் நிலையை மாற்றி, மாதம் ரூ.200 மட்டுமே பிடித்தம் செய்ய வழிவகை செய்யப்பட்டது.

★ தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தத்தைக் காரணம் காட்டி, நிர்வாகம் வழங்காமல் இருந்த போனஸ் மற்றும் பண்டிகை முன்பணம் ஆகியவை அரசின் தலையீட்டால் வழங்கப் பட்டுள்ளன.

★ 8 மணி நேரம் வேலை செய்யவில்லை என்ற காரணம் காட்டி நிர்வாகத்தால் வேலை நீக்கம் செய்யப்பட்ட 785 தொழிலாளர்கள், அரசின் அறிவுரைப்படி மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டனர்.

★ தொழிலாளர்கள், சட்டப்படி காலை 7.30 மணிக்குத் தோட்டங்களுக்கு வரவேண்டும் என்ற நிலை இருந்தாலும் தொலைவில் உள்ள தோட்டங் களுக்குக் காலை 8 மணிக்குள் வந்தால் போதும் என்ற சலுகையை வழங்க அரசு நிர்வாகத்துடன் பேசி ஏற்பாடு செய்துள்ளது.

★ இலைபறித்தல், கவாத்து வெட்டுதல் போன்ற பணிகளில் இயந்திரமயமாக்குதல் கூடாது என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கையை அரசின் தலையீட்டால் நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

★ தற்போதைய மதிய உணவு இடைவேளை நேரமான ஒரு மணி நேரத்தை அரை மணி

நேரமாகக் குறைக்க வேண்டும் என்ற புதிய தமிழகத்தின் கோரிக்கையை மற்ற தொழிற் சங்கங்கள் ஏற்றுக்கொள்ளாததால் இப்பிரச்சினையை நடுவர் மன்ற தீர்ப்பிற்கு விட புதிய தமிழக தொழிற்சங்கம் ஒப்புக் கொண்டுள்ளது.

★ வேலைநேரம் என்பது 8 மணி நேரம் என்றும், மதிய உணவு இடைவேளை நேரம் 1 மணி நேரம் என்றும் புதிய தமிழகம் தொழிற்சங்கமும், சி.ஐ.டி.யூ.வும் ஏற்கெனவே ஒப்புக்கொண்டு 30.4.1999 அன்று கையெழுத்திட்டுள்ளன.

★ 8 மணி நேர வேலைக்குப் பதிலாக 6½ மணி நேரம் மட்டுமே வேலை செய்த தொழிலாளர்களின் ஊதியத்தில் நிர்வாகம் சட்டத்தைக் காட்டி, அரை நாள் சம்பளம் பிடித்தம் செய்ததை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. வேலை செய்யாத 1½ மணி நேரத்திற்கான ஊதியத்தை பிடிப்போம் என்ற நிர்வாகத்தின் நிலையை மறு பரிசீலனை செய்து, நிர்வாகமும், தொழிற்சங்கங்களும் நேரடியாகப் பேசி ஒரு வார காலத்திற்குள் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்றும், இல்லையென்றால், அரசு சட்டரீதியாக நடவடிக்கையை மேற்கொள்ளும் என்றும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

★ சட்ட விதிகளை அமுலாக்காத தோட்ட நிறுவனங்கள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. கடந்த ஆண்டில் மட்டும் 5,112 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தொழிலாளர் நலத் துறையால் 1,034 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

★ பல கோரிக்கைகள் நிறைவேற்றப் பட்டும், அவைகள் சம்பந்தமான ஒப்பந்தங்களில் கையெழுத் திட்டு விட்டும், இப்பொழுது சிலர் சட்டத்திற்குப் புறம்பாகச் செயல் படுவதும், வன்முறையில் ஈடு படுவதும், அப்பாவி மக்களைப் பலியாக்குவதும் உள்நோக்கத் துடனே அன்றி வேறில்லை.

---

## மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.381.60 கோடி நிதி பகிர்ந்தளிக்க அரசு ஆணை

*1999-2000ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.381.60 கோடியாகும். 1997-1998ஆம் ஆண்டின் மக்கள் தொகை அடிப்படையிலான அளவுகோலின்படி (மொத்த மக்கள் தொகை 2/3 மதிப்பு மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் தொகை 1/3 மதிப்பு) இந்த ஆண்டிலும் (1999-2000) மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த நிதி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.*

*1999-2000ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியான ரூ.381.60 கோடியை கிராம ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்கள்/மாவட்ட ஊராட்சிகளுக்கு 47:45:8 என்ற விகிதத்தில் நிதி பகிர்ந்தளிக்க அரசு ஆணையிட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட விகிதாசாரப்படி, கிராம ஊராட்சிகளுக்கு ரூ.179.35 கோடியும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.171.72 கோடியும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.30.53 கோடியும் விடுவிக்க அரசு 5.7.99-ல் ஆணை வெளியிட்டுள்ளது.*

*ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கான ஓய்வூதிய பங்குத் தொகையான ரூ.31.96 கோடியை நான்கு தவணைகளாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய காலாண்டு நிதி ஒதுக்கீட்டிலிருந்து பிடித்தம் செய்து வழங்கப்படும்.*

*மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதியினை நான்கு காலாண்டுத் தவணைகளாக அதாவது ஜூன், செப்டம்பர், டிசம்பர் மற்றும் மார்ச் திங்களில் வழங்கப்படும். மேலும் அந்நிதியினை மாவட்ட ஆட்சித் தலைவர்களே காலாண்டுத் தவணைகளாகப் பெறவும், அதனை மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு குறிப்பிட்டக் காலாண்டுகளில் அந்த அமைப்புகளின் கணக்கில் வரவு வைக்கவும் அதிகாரம் வழங்கப்படுகிறது.* ★

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் ஆதிதிராவிடர் & பழங்குடியினர் மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி உதவி / பரிசுத் தொகைகள்

| வ.எண். | திட்டத்தின் பெயர் | விவரம் | வரையறைகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|---|
| **அ.** | **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவிகள்** | | | |
| 1. | கரும்பலகைகள் | 1 முதல் 3ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவர் / மாணவியர் களுக்கும் | ஏதுமில்லை | பள்ளித் தலைமையாசிரியர் |
| 2. | பாடநூல், குறிப்பேடுகள் | 3 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவ / மாணவியர்களுக்கும் | ஏதுமில்லை | பள்ளித் தலைமையாசிரியர் |
| 3. | சீருடைகள் | 1 முதல் 12ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவ / மாணவியர்களுக்கும் | ஏதுமில்லை | பள்ளித் தலைமையாசிரியர் |
| 4. | சிறப்பு கையேடு | 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவ, மாணவியர் அனைவருக்கும் | ஏதுமில்லை | பள்ளித் தலைமையாசிரியர் |
| **ஆ.** | **மற்ற பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான சலுகைகள்**<br>**❖ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை** | | | |
| 1. | இலவச கல்வித் திட்டத்தின் கீழ் கல்விக் கட்டணம் கட்டுவதிலிருந்து விலக்களித்தல் | அரசு பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை மாணவர்கள் கல்விக் கட்டணம் செலுத்தவேண்டியதில்லை. | ஏதுமில்லை | பள்ளித் தலைமையாசிரியர் |
| 2. | சிறப்புக் கட்டணம் | 6 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவர்கள் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணத்தை பள்ளிக்கு அரசே நேரிடையாக வழங்குகிறது. பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுக்கான தேர்வுக் கட்டணத்தை செலுத்த வேண்டியதில்லை. | ஏதுமில்லை | பள்ளித்தலைமையாசிரியர் |
| 3. | விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் வழங்குதல் | பள்ளியைச் சார்ந்த அல்லது அங்கீகரிக்கப்பட்ட விடுதியில் தங்கி 6 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் ஆதிதிராவிடர் & பழங் குடியினர் மாணவர்களுக்கு உணவு உறையுள் கட்டணம் வழங்கப் படுகிறது. | ஆண்டு வருமானம் ரூ.15,000க்குள் இருக்க வேண்டும் | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | விவரம் | வரையறைகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|---|
| 4. | பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கல் | பொதுப்பள்ளிகளில் 9ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு படிக்கும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவர்களுக்கு இலவசமாக பாடநூல்களும் 4 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவர்களுக்கும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்கப் படும். | ஏதுமில்லை | தலைமையாசிரியர் |
| 5. | தூய்மையற்ற தொழில் புரிவோர் குழந்தைகளுக்கான உதவித்தொகை (உலர் கழிப்பிடம் / சுத்தம் செய்வோர், பெருக்குவோர் தோல் பதனிடுவோர் போன்றவர்களின் குழந்தைகள்) | பெற்றோர்களுடன் வீட்டில் இருந்து படிப்பவர்களுக்கும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும். | ஆண்டு வருமானம் சாதி மதபேதம் ஏதுமில்லை | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| | | <u>பெற்றோருடன் தங்கிபடிப்பவர்களுக்கு</u><br>1 முதல் 5ஆம் வகுப்பு வரை மாதம் ரூ.25<br>6 முதல் 8ஆம் வகுப்பு வரை மாதம் ரூ.40<br>9 முதல் 10ஆம் வகுப்பு வரை மாதம் ரூ.50 | பத்து மாதங்களுக்கு | |
| | | <u>விடுதி மாணவர்களுக்கு</u><br>3 முதல் 8ஆம் வகுப்பு வரை மாதம் ரூ.200<br>9 முதல் 10ஆம் வகுப்பு வரை மாதம் ரூ.250 | பத்து மாதங்களுக்கு | |
| | | இது தவிர ஒட்டுமொத்த மான்யத் தொகை ஆண்டுஒன்றுக்கு ரூ.500 வழங்கப்படும். | | |
| **இ.** | **<u>ஊக்கப் பரிசுகள் வழங்குதல்</u>** | | | |
| 1. | அறிவுக்கூர்மை பரிசுத் தொகை | மாவட்ட அளவில் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் ஆதிதிராவிடர் / கிறித்தவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர் களிலேயே முதலாவதாக அதிக மதிப்பெண் பெறும் இரண்டு மாணவ / இரண்டு மாணவியருக்கு இப்பரிசு வழங்கப்படும். முதல் ஆண்டு ரூ.800ம் அடுத்த 5 ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.960–ம் வழங்கப்படும். | பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பின்னர் தொடர்ந்து பயில வேண்டும். | இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5 |
| 2. | காந்தி நினைவு பரிசு | ஆதிதிராவிட மாணவ–மாணவிய ரிடையே 12–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதலாவதாக அதிக மதிப்பெண்கள் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு முதல் ஆண்டு ரூ.1500ம் அடுத்த 5 ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1000 வீதமும் பரிசு வழங்கப்படும். | +2 படிப்பிற்கு பின்னர் மேல்படிப்பை தொடர்ந்து பயில வேண்டும். | இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5 |
| 3. | தகுதி வழிவகை பரிசு | காந்தி நினைவு பரிசு திட்டம் போன்றதாகும் இத்திட்டம். மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்குரியது. | +2 படிப்பு தேர்ச்சி பெற்ற பின்னர் தொடர்ந்து படிக்க வேண்டும். | இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5 |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | விவரம் | வரையறைகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|---|
| 4. | முதலமைச்சர் தகுதி பரிசு | மாநில அளவில் 12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் ஆதிதிராவிடர் / கிறித்தவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த முதல் 1000 மாணவர்கள் மற்றும் 1000 மாணவியர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1500 பரிசாக ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கப்படும். | +2 படிப்பு தேர்ச்சி பெற்ற பின்னர் தொடர்ந்து படிக்க வேண்டும். | இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5 |
| 5. | ஆதிதிராவிடர் பெண் குழந்தைகள் படிப்பை இடையில் நிறுத்திவிடாமல் இருக்க ஊக்கப்பரிசுத் தொகை வழங்குதல் | ஆதிதிராவிடர் பெண் குழந்தைகள் படிப்பை இடையில் நிறுத்திவிடாமல் இருக்க 3 முதல் 5–ஆம் வகுப்பு வரை படிக்கும் 60,000 குழந்தை களுக்கு ஆண்டுக்கு ரூ.500 ஊக்கத்தொகை வழங்கப்படும். இத்திட்டம் தருமபுரி, திருவண்ணாமலை, காஞ்சீபுரம், திருவள்ளூர், வேலூர், திருவாரூர், பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், விருதுநகர், நாகப்பட்டினம், சேலம், நாமக்கல், திருச்சி, கரூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. 6ஆம் வகுப்பில் சேர்ந்து படிக்கும் பெண் குழந்தைகள் படிப்பை இடையில் நிறுத்தாமல் இருக்க மாதம் ரூ.100 வீதம் 30,000 குழந்தைகளுக்கு மாவட்டங்கள் அனைத்திற்கும் வழங்கப்படுகிறது. | – | மாவட்ட மேலாளர், தாட்கோ |
| 6. | பரிசுத்தொகைத் திட்டம் | பட்டப்படிப்பு, பட்ட மேல்படிப்பு, தொழில் பட்டப் படிப்பு ஆகிய தேர்வுகளில் 60% பெற்று முதல் முறையிலேயே தேர்ச்சிப் பெறுவோருக்கு பரிசுத்தொகை முறையே ரூ.2000, 4000, 5000 பரிசாக வழங்கப்படும். மொத்தம் ஆண்டொன்றுக்கு 550 பரிசுகள். | 60% பெற்று முதல் முறையிலேயே தேர்ச்சி பெற்று படிப்பினை முடித்திருக்க வேண்டும். | இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5 |
| 7. | <u>மாநில அளவிலான பரிசு</u><br>12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு | +2 பொதுத்தேர்வில் மாநில அளவில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவர்களில் அதிக மதிப்பெண் பெற்றவர்களில் ஒவ்வொரு இனத்திலும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்குத் தலா ரூ.25,000 பரிசாக வழங்கப்படுகிறது. | – | இயக்குநர் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| | 10ஆம் வகுப்பு | 10–ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தில் ஒவ்வொரு இனத்திலும் முதல் மதிப்பெண் பெற்ற ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு ரூ.10,000 பரிசாக வழங்கப்படுகிறது. | – | இயக்குநர் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | விவரம் | வரையறைகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|---|
| 8. | +2 பொதுத்தேர்வில் பாடங்கள் ஒவ்வொன்றிலும் மாநில அளவில் முதன்மை | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியர்களுக்கு ஒவ்வொரு இனத்திலும் ஒவ்வொருவர் பரிசுத்தொகை ரூ.2000. | – | இயக்குநர் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| | 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் பாடங்கள் ஒவ்வொன்றிலும் மாநில அளவில் முதன்மை | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியர்களுக்கு ஒவ்வொரு இனத்திலும் ஒவ்வொருவர் பரிசுத் தொகை ரூ.1000. | – | இயக்குநர் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| | **மாவட்ட அளவிலான பரிசு** | | | |
| 9. | 12ஆம் வகுப்பு | முதல் மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு ரூ.3000 பரிசு. | | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 10. | பத்தாம் வகுப்பு | அதிக மதிப்பெண்கள் பெற்ற 3 மாணவர்கள் / 3 மாணவிகளுக்கு பரிசு.<br>முதல் பரிசு ரூ.1000<br>இரண்டாம் பரிசு ரூ.500<br>மூன்றாம் பரிசு ரூ.300 | – | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 11. | எட்டாம் வகுப்பு | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தில் ஒவ்வொரு இனத்திலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி.<br>முதல் பரிசு 1 மாணவர் & 1 மாணவி – ரூ.1000<br>இரண்டாம் பரிசு – ரூ. 500<br>மூன்றாம் பரிசு – ரூ. 300 | – | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 12. | தனித்தகுதி மான்யம் | 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 60% மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ரூ.300 பரிசுத் தொகையாக வழங்கப்படும். | 60% மதிப்பெண் பெற்று மேல் படிப்பை தொடர வேண்டும். | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்/கல்லூரிக் கல்வி இயக்குநர் |
| ஈ. | **கல்வி உதவித் தொகைகள்** | | | |
| 1. | மத்திய அரசு கல்வி உதவித் தொகைத் திட்டம் | 1. இத்திட்டத்தின் கீழ் 11ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் விடுதியில் அல்லாமல் பெற்றோருடன் தங்கி படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ரூ.90-லிருந்து ரூ.190 வரை படிப்பை பொறுத்து பராமரிப்புத் தொகை [illegible]ங்கப்படும். | ஆண்டு வருமானம் ரூ.50,920–க்கு மிகாமல் இருக்க வேண்டும். | பள்ளி தலைமை ஆசிரியர் / கல்லூரி முதல்வர் (பிற மாநிலங்களில் பயிலும் தமிழகத்தை சார்ந்த மாணவர்கள் சென்னை–5, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரை அணுக வேண்டும்) |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | விவரம் | வரையறைகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|---|
| | | 2. விடுதியில் தங்கி படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ரூ.150–லிருந்து ரூ.425 வரை படிப்பை பொறுத்து பராமரிப்புத் தொகை வழங்கப்படும். 3. இவை தவிர கல்லூரிக்குச் செலுத்த வேண்டிய திரும்பப் பெற இயலாத கட்டணங்கள் அனைத்தும் வழங்கப்படும். | | |
| | பத்தாம் வகுப்புக்கு மேல் கல்வி பயிலும் ஊனமுற்ற இந்து ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவ/மாணவியருக்கான கூடுதல் சலுகை | (அ) பார்வையற்ற மாணவர்களுக்கு உள்ள உதவியாளர்களுக்கான படிப்பிற்கேற்றவாறு மாதம் ரூ.100 முதல் ரூ.150 வரை. (ஆ) பார்வையற்றோர், காதுகேளாதோர், மனவளர்ச்சி குன்றிய மனநோயால் பாதிப்பு அடைந்தவர்களுக்குப் போக்குவரத்துப் படி ரூ.100 வீதம். (இ) கைகால் ஊனம் இருந்து விடுதியில் தங்கி பயிலாதவர்களாக இருப்பின் அவ்வாறு உள்ள மாணவர்களின் வழித்துணையாளர்களுக்கு படி அளிப்பதற்காக மாதம் ரூ.100 வீதம். (ஈ) எலும்பு முறிவால் ஊனமுற்ற மாணவர்கள் விடுதியில் தங்கி இருப்பின் கல்வி நிலையத்திற்குச் செல்ல நியமனம் செய்யப்படும் உதவியாளருக்கு மாதம் ரூ.100 வீதம் சிறப்புப்படி. (உ) மூளை வளர்ச்சி குன்றியதால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிறப்பு பயிற்சி அளிப்பவர்களுக்கு மாதம் ரூ.150 வீதம் வழங்கப்படும். | – | கல்லூரி முதல்வர் / பள்ளி தலைமை ஆசிரியர் |
| 2. | மாநில அரசு சிறப்புக் கல்வி உதவித் தொகை | மத்திய அரசு கல்வி உதவித் தொகை பெற தகுதியற்ற 11ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு இந்த திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்கப்படும். பெற்றோருடன் தங்கி படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ரூ.65–ல் இருந்து ரூ.125 வரையில் பயிலும் படிப்பை பொறுத்து வழங்கப்படும். விடுதி மாணவர்களுக்கு மாதம் ரூ.115–ல் இருந்து ரூ.280 வரை படிப்பை பொறுத்து பராமரிப்பு தொகை | ஆண்டு வருமானம் ரூ.50,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும். | பள்ளி தலைமை ஆசிரியர் / கல்லூரி முதல்வர் |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | விவரம் | வரையறைகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|---|
| | | வழங்கப்படும். இது தவிர கல்லூரிக்கு கட்டாயமாக செலுத்த வேண்டிய திரும்ப பெற இயலாத கட்டணங்கள் அனைத்தும் வழங்கப் படும். | | |
| 3. | இலவசக் கல்வி | மேற்கூறிய மத்திய மற்றும் மாநில அரசு கல்வி உதவித்தொகை திட்டங்களின் மூலம் பயன்பெற இயலாத +1, +2 மற்றும் பகல் நேரக் கல்லூரியில் இளங்கலை பட்ட படிப்பு படிப்பவர்களுக்கு சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் வழங்கப்படும். | வருமான வரம்பு ஏதுமில்லை. | கல்லூரி முதல்வர் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 4. | தொழில் கல்வி பெறுபவர்களுக்கு இலவச கல்வித் திட்டம் | தொழில் பட்டப்படிப்பு பயில்பவர் களுக்கு இத்திட்டத்தின் கீழ் படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் கல்வி நிலையத்திற்கு செலுத்த வேண்டிய திருப்பி அளிக்கப்படாத கட்டணங்கள் முதலியன வழங்கப்படும். | ஆண்டு வருமானம் ரூ.15,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும். குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும். | கல்லூரி முதல்வர் மூலம் இயக்குநருக்கு |
| 5. | கல்வி கடன் உதவித்தொகை | விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களுக்குக் கூடுதலாக ஏற்படும் விடுதிக் கட்டணங்கள் சரிகட்டுவதற்காக கல்விக் கடன் உதவித்தொகை வழங்கப்படுகிறது. பட்டப்படிப்புக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.6,500 பட்ட மேல்படிப்பு பயில்பவர் களுக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.7,000–ம் கடனாக வழங்கப்படும். படித்து முடித்த மூன்று ஆண்டு களுக்கு பிறகோ அல்லது வேலையில் சேர்ந்த ஒரு ஆண்டுக்கு பிறகோ இக்கடனை அரசுக்கு திருப்பிச் செலுத்த வேண்டும். | வருமான வரம்பு ஏதுமில்லை. விடுதி மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்படும். | கல்லூரி முதல்வர் மூலமாக மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் |
| 6. | கல்வி சுற்றுலா கட்டணம் | தொழில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.500 வழங்கப்படும். | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவர் தொழில் கல்வியை முடிப்பதற்கு இக்கல்வி சுற்றுலா அவசியமானதாக இருத்தல் வேண்டும். | கல்லூரி முதல்வர் மூலமாக மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | விவரம் | வரையறைகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|---|
| 7. | அஞ்சல் வழி கல்விக்குப் புத்தகப்பணம் | 1-10-95 முதல் அஞ்சல் வழி கல்வி பயில்பவருக்கு புத்தகப் பணமாக ஆண்டுக்கு ரூ.500 வழங்கப்படும். | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவர்கள் ஆண்டு வருமானம் ரூ.50,920-க்கு மிகாமல் இருக்க வேண்டும். | பல்கலைக்கழக பதிவாளர் மூலம் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 8. | ஆராய்ச்சி மாணவர்கள் கட்டுரை தட்டச்சு / அச்சிடும் கட்டணம் | மேல்கல்வி ஆராய்ச்சி மாணவர்களுக்குக் கட்டுரை தட்டச்சு / அச்சிட ஆண்டுக்கு ரூ.600 கல்வி உதவித் தொகையுடன் வழங்கப்படும். | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் மேல்படிப்பில் ஆராய்ச்சி கட்டுரை தயார் செய்தல். | கல்வி நிறுவனம் மூலம் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| **உ.** | **விடுதிகள்**<br>பள்ளி, கல்லூரி, தொழில் கல்வி, பட்ட மேற்படிப்பு மாணவர், மாணவியர்களுக்குத் தனித்தனியே விடுதிகள் உள்ளன. இம்மாணவர்கள் கல்வி பயில வசதியாக மாணவர் / மாணவியர் இல்லங்கள் இயங்கி வருகின்றன. | இந்த விடுதியில் உணவு உறைவிடம் இலவசமாக வழங்கப்படுகிறது. ஆதி திராவிடர் / பழங் குடியினர் மாணவர் 75% பிற்படுத்தப் பட்டோர் 20% இதர வகுப்பினர் 5% என்ற விகிதத்தில்மாணவர் சேர்க்கப்படுகின்றனர். | ஆண்டு வருமானம் ரூ.50,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும். | விடுதி காப்பாளர் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| **ஊ.** | **புத்தக வங்கித் திட்டம்**<br>மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம் மற்றும் பாலிடெக்னிக் படிப்புகள் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்கள் புத்தகங்கள் பெற்று பயன்பெறும் வகையில் அந்தந்த கல்வி நிலையங்களில் புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. | கல்வி உதவித்தொகை பெறும் இரண்டு ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவர்களுக்கு ஒரு செட் புத்தகம் என்ற விகிதத்தில் படிப்பிற்கு ஏற்றவாறு கீழ்க்குறிப்பிட்டுள்ள மதிப்பிற்குப் புத்தகங்கள் வாங்கி புத்தக வங்கியில் சேர்க்கப்படுகின்றன.<br>1. மருத்துவம் மற்றும் பொறியியல் ரூ.7,500<br>2. கால்நடை மருத்துவம் ரூ.5,000<br>3. வேளாண்மை ரூ.4,500<br>4. பாலிடெக்னிக் ரூ.2,400<br>1998-99 ஆம் ஆண்டு முதல் பின்வரும் படிப்புகள் பயிலும் ஆதிதிராவிடர் / பழங் குடியினர் மாணவ / மாணவி யர்களுக்கும் ஒரு மாணவருக்கு ஒரு செட் புத்தகம் வீதம் வாங்க கீழ்க்கண்டவாறு தொகை வழங்கப்படும். | இந்த திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு மத்திய அரசு கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை பெறுபவராக இருத்தல் வேண்டும். | கல்வி நிலையத் தலைவர் / கல்லூரி நூலகர் |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | விவரம் | வரையறைகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|---|
| | | 1. மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம் போன்ற படிப்புகளின் பட்ட மேற்படிப்புகள் ரூ.5,000<br>2. சட்ட படிப்பு, பட்டயக் கணக்காயர் படிப்பு, எம்.பி.ஏ., பயோசயின்ஸ் படிப்புகள் ரூ.5,000 | | |
| எ. | **வெளிநாடு சென்று கல்வி பயில்வதற்கு உதவித்தொகை** | | | |
| | | 1998–99ஆம் ஆண்டு முதல் அயல்நாட்டு பல்கலை கழகங்களுடனான மாணவர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் வெளிநாடு சென்று உயர்கல்வி பயில ஒரு மாணவருக்கு ரூ.3 இலட்சம் வீதம் ஒரு ஆண்டுக்கு 10 மாணவர்களுக்கு மாநில அரசு உதவித்தொகை வழங்கப்படும். | வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் சேருவதற்குச் சேர்க்கை பெற்றிட வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும். | இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5 |
| ஏ. | **நுழைவுக்கட்டணம் பதிவுக் கட்டணம் சலுகை** | | | |
| | | 1999–2000ம் ஆண்டு முதல் பட்டம் / பட்ட மேற்படிப்பு மற்றும் மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம் போன்ற படிப்புகள் பயில்பவர்களுக்கு நுழைவுக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. | ஏதுமில்லை | கல்வி நிலைய தலைவர் மற்றும் இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5 |

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர்,
சென்னை–600 005.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:5368926/5368927/5364906

# கோ-ஆப்டெக்ஸின் வண்ணங்கள் உங்கள் எண்ணங்கள்.





கோ-ஆப்டெக்ஸ் ரகங்கள்:

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

★ இன்றே அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திற்கு வருகை தாரீர்.

தமிழரசு

பதிவு எண். M.8676
Licence No. TN/MS (C)/PP-23

